## தேசிய உற்பத்தியும் செலவும்

**முன்னுரை**

தற்காலிக மதிப்பீடுகளின்படி, 1966ஆம் ஆண்டு இலங்கையின் மொத்தத் தேசிய உற்பத்தி, 1965ஆம் ஆண்டில் இருந்ததிலும் பார்க்க, நடைமுறை விலைகளின்படி 1·3 சதவீதத்தாலும், நிலையான (1959ஆம் ஆண்டு) விலைகளின்படி 1·6 சதவீதத்தாலும் உயர்வுற்றது. இவ்வருடத்தில் இலங்கையின் வர்த்தக மாற்று விகிதம் 13·1 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றதன் பயனாக, இலங்கையின் உண்மைத் தேசிய வருமானம் 1·2 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைப் பதிவு செய்தது. இவ்வாண்டில் ஏற்பட்ட 2·3 சதவீதமான சனத்தொகை அதிகரிப்போடு நோக்குகையில், தனியாளுக்கான மொத்தத் தேசிய உற்பத்தி, நடைமுறை விலைகளின்படி 1·0 சதவீதத்தாலும், நிலையான விலைகளின்படி 0·7 சதவீதத்தாலும் வீழ்ச்சியடைந்தது. 1966ஆம் ஆண்டில் தனியாளுக்கான உண்மைத் தேசிய வருமானம் 3·4 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றது.

தற்காலிக மதிப்பீடுகளின்படி 1966ஆம் ஆண்டின் மொத்தத் தேசிய உற்பத்தி, நடைமுறைச் சினைக் கொள்விலைகளின்படி 75291 இலட்சம் ரூபாய்களாக விளங்கிற்று. இது 1965ம் ஆண்டின் திருத்தியமைக்கப்பட்ட மதிப்பீட்டின்படியுள்ள தொகையான 74359 இலட்சம் ரூபாய்களுடன் ஒப்பிடத்தக்கது. 1965ஆம் ஆண்டின் வீத உயர்வாகிய 2·8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1966ஆம் ஆண்டின் வீத உயர்வு 1·3 சதவீதமாகும். 1966ஆம் ஆண்டின் வீத உயர்வு குறைய வேண்டியமை, இலங்கையின் ஏற்றுமதிப் பெறுமானம் இவ்வருடம் குறிப்பிடத்தக்க அளவால் வீழ்ச்சியுற்றமையிலிருந்து எதிர்பார்க்கப்படவேண்டியதொன்றுகும். 1965ஆம் ஆண்டில் 4·0 சதவீதத்தால் அதிகரித்த மொத்த ஏற்றுமதிப் பெறுமானம் 1966ஆம் ஆண்டில், தேயிலை, தெங்குப் பொருட்கள் ஆகியவற்றின் ஏற்றுமதிப் பெறுமானங்கள் வீழ்ச்சியுற்றமையால், 12·5 சதவீதத்தாற் கூர்மையாக வீழ்ச்சியடைந்தது. ஏற்றுமதித் துறையின் நிகர உற்பத்திப் பெறுமானம் (உபயோகிக்கப்பட்ட இறக்குமதிப் பொருட்களின் பெறுமானங்களையும், கையிருப்பில் ஏற்பட்ட மாற்றங்களின் பெறுமானங்களையும் நீக்கி) இவ்வருடம் 10·3 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றதென்பது, 1965இல் ஏற்பட்ட 2·4 சதவீதம் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடத்தக்கது.

ஏற்றுமதித் துறையின் உற்பத்தியில் ஏற்பட்ட மேற்கூறிய வீழ்ச்சிக்கு எதிராக உள்நாட்டு உபயோகத்திற்கென உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் சேவைகளின் பெறுமானம் முந்தைய வருடத்தில் ஏற்பட்ட அதிகரிப்பிலும் பார்க்க உயர்ந்த வீதமுடைய அதிகரிப்பைக் காட்டிற்று. 1965ஆம் ஆண்டில் 28·0 சதவீதத்தாற் கூர்மையாக வீழ்ச்சியுற்ற நெல் உற்பத்தியின் பெறுமானம், 1966ஆம் ஆண்டில் 28·1 சதவீதத்தால் அதிகரித்தது. இத்துடன், நுகர்ச்சிக்கான கைத்தொழிற் பொருட்கள், மீன், போக்குவரத்து, அரசாங்கச் சேவை ஆகியனவற்றில் ஏற்பட்ட மிதமான அதிகரிப்புகளின் பயனுல் உள்நாட்டுத்துறையின் நிகர உற்பத்தி 4·7 சதவீதத்தால் அதிகரித்தது. இவ்வதிகரிப்பு 1965ஆம் ஆண்டில் ஏற்பட்ட 2·7 சதவீத அதிகரிப்பிலும் பார்க்க உயர்வானதாகும். ஏற்றுமதித் துறையினதும், உள்நாட்டுத் துறையினதும் நிகர உற்பத்திகளில் ஏற்பட்ட மாற்றங்கள் ஒன்றிற்கொன்று எதிராக அமைந்தமையால், 1965ஆம் ஆண்டின் மொத்தத் தேசிய உற்பத்தியில் 79·4 சதவீதமான பங்குடையதாக அமைந்த மொத்த உள்நாட்டு உற்பத்தி, 1966ஆம் ஆண்டில் 82·1 சதவீதமான பங்குடையதாக உயர்வுற்றது.

தேயிலையினதும், தெங்குப் பொருட்களினதும் ஏற்றுமதிப் பெறுமானங்களில் ஏற்பட்ட வீழ்ச்சிகளுக்குத் துணைக்காரணியாயிருந்தது அவற்றின் விலை வீழ்ச்சிகளேயாகும். எனவே ஏற்றுமதித் துறையின் நிகர உற்பத்தி, நடைமுறை விலைகளின்படியான 10·3 சதவீதம்கொண்ட வீழ்ச்சியைத் தெரிவித்ததற்கெதிராக நிலையான

விலைகளின்படியுள்ள வீழ்ச்சி ஓரளவு குறைவான 3·9 சதவீதங் கொண்ட வீழ்ச்சியாக இருந்தது. உள்நாட்டுத் துறையின் நிகர உற்பத்தி 3·7 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது. நிலையான விலைகளின்படியான மொத்தத் தேசிய உற்பத்தி 1·6 சதவீத அதிகரிப்பைக் காட்டுகின்றது. 1965ஆம் ஆண்டில் ஏற்பட்ட வீத அதிகரிப்பு 1·8 சதவீதமாகவுள்ளது.

உற்பத்தி வெளிநாட்டு வர்த்தகம் ஆகியவற்றினூடாக நாட்டிற்குக் கிடைக்கக்கூடிய உண்மைப் பொருள் வளங்களை அளவிட்டு அறிவதற்கு, வர்த்தக மாற்றுவிகிதங்களின் மாறுபாட்டினால் வர்த்தகத்தில் ஏற்பட்ட இலாப நட்டங்களுக்கு இடம் விட்டு, உண்மை உற்பத்தியின் மதிப்பீடுகள் கணிக்கப்பட வேண்டும். 1966ஆம் ஆண்டில் ஏற்றுமதி விலைகள் வீழ்ச்சியுற்றும், இறக்குமதி விலைகள் அதிகரித்தும் காணப்பட்டமையால் இலங்கையின் வர்த்தக மாற்றுவிகிதம் 13·1 சதவீதத்தாற் குறைவுற்றது. வர்த்தக மாற்று விகிதத்தில் ஏற்பட்ட மாற்றத்திற்கு இடம் விட்டுக் கணித்த உண்மை உற்பத்தியின் மதிப்பீடுகளைக் கொண்டு கணிக்கப்பட்ட உண்மைத் தேசிய வருமானம் 1965ஆம் ஆண்டில் 2·0 சதவீதத்தால் அதிகரித்ததற்கு எதிராக 1966ஆம் ஆண்டில் 1·2 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது.

1966ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் உள்ள சனத்தொகை 114,91,000 எனத் தற்காலிகமாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது முந்தைய வருடத்தின் நடுப்பகுதியிலிருந்த தொகையிலும் பார்க்க 2·3 சதவீதம் உயர்வானதாகும். நடைமுறை விலைகளின்படி தனியாட்களுக்கான மொத்தத் தேசிய உற்பத்தி 1965ஆம் ஆண்டில் 0·6 சதவீதத்தால் அதிகரித்ததற்கெதிராக, 1966ஆம் ஆண்டில் 1·0 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றது. நிலையான விலைகளின்படி தனியாளுக்கான மொத்தத் தேசிய உற்பத்தியில் 1965ஆம் ஆண்டு ஏற்பட்ட 0·6 சதவீத அதிகரிப்பிற்கெதிராக 1966ஆம் ஆண்டில் 0·7 சதவீத வீழ்ச்சி ஏற்பட்டது. தனியாளுக்கான உண்மைத் தேசிய வருமானம் 1966ஆம் ஆண்டில் 3·4 சதவீதத்தாற் கூர்மையாக வீழ்ச்சியடைந்திருந்தமை, முந்தைய வருடத்தில் ஏற்பட்ட சதவீத வீழ்ச்சியாகிய 0·4 சதவீதத்துடன் ஒப்பிடத்தக்கது.

நுகர்ச்சி, மூலதன ஆக்கம் ஆகியனவற்றின்படி மதிப்பிடப்பட்ட மொத்தக் கேள்வி 1966ஆம் ஆண்டில் ஒரு கணிசமான அதிகரிப்பைக் காட்டிற்று. நுகர்ச்சி 5·5 சத வீதத்தால் அதிகரித்தும், மூலதன ஆக்கம் 8·4 சதவீதத்தால் அதிகரித்தும், மொத்தக் கேள்வி 5·9 சதவீதத்தால் அதிகரித்தும் காணப்பட்டன. மொத்தத் தேசிய உற்பத்தி மெதுவாக வளர்ந்த சமயத்தில் நுகர்ச்சியும் மூலதன ஆக்கமும் கணிசமாக அதிகரித்த தன் பயனால், மொத்தக் கேள்விக்கும், உற்பத்தியினூடாகக் கிடைக்கக்கூடிய பொருள் வளங்களுக்குமிடையில் ஒரு குறைவு ஏற்பட்டது. பொருள் வளங்களில் ஏற்பட்ட இக்குறையின் பிரதிபலிப்பாக இலங்கையின் சென்மதி நிலுவையிலுள்ள நடைமுறைக் கணக்கில் ஒரு கணிசமான குறை தோற்றமளித்தது.

**பணநியதியின்படி உற்பத்தியும் செலவும்**

நடைமுறை விலைகளின்படி இலங்கையின் மொத்தத் தேசிய வருமானம், செலவு ஆகியவற்றிலும், உண்மை உற்பத்தி, உண்மை வருமானம், ஆகியவற்றிலும் 1966ஆம் ஆண்டில் ஏற்பட்ட மாற்றங்களைப்பற்றிப் பின்வரும் பக்கங்களில் ஆராயப்பட்டுள்ளது. இம் மாற்றங்களுக்குக் காரணியாக இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகத்தில் ஏற்பட்ட மாறுபாடுகள் அதாவது முக்கியமாக, ஏற்றுமதி, வர்த்தக மாற்றுவிகிதம், ஆகியன வற்றில் ஏற்பட்ட மாறுபாடுகள், முதலிடம் வகித்தன என்பது முதலிலேயே குறிப்பிடத் தக்கது. இவ்வாண்டில் இலங்கையின் ஏற்றுமதிகளின் மொத்தப் பெறுமானம் 2399 இலட்சம் ரூபாய்களால் கூர்மையாக வீழ்ச்சியுற்றிருக்கையில், இறக்குமதிகள் மேலும் கூர்மையாக 5539 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்து விளங்கின. ஏற்றுமதிப் பெறு மானம் வீழ்ச்சியடைவதற்கு இலங்கையின் பிரதான ஏற்றுமதிப் பொருட்களின்

## அட்டவணை II (அ) 1

### உற்பத்தியினதும் செலவினதும் சுருக்கக் குறிகாட்டிகள் நடைமுறை விலைகளின்படி

| | 1959 | 1960 | 1961 | 1962 | 1963 | 1964 | 1965 | 1966 |
|---|---|---|---|---|---|---|---|---|
| **(அ) பெறுமானங்கள்** | | | | | | | | |
| (1) சினைக்கொள் விலைகளின்படி மொத்தத் தேசிய உற்பத்தி (இலட்சம் ரூபாய்களில்) .. | 5,978·4 | 6,265·3 | 6,309·0 | 6,568·3 | 6,824·1 | 7,222·9 | 7,435·9 | 7,529·1 |
| (2) சந்தை விலைகளின்படி மொத்த உள்நாட்டுச் செலவு (இலட்சம் ரூபாய்களில்) ... | 6,657·0 | 6,899·5 | 6,887·9 | 7,054·4 | 7,375·6 | 7,849·2 | 7,931·2 | 8,399·7 |
| (3) சந்தை விலைகளின்படி தனியார் நுகர்ச்சி (இலட்சம் ரூபாய்களில்) | 4,681·2 | 5,025·2 | 4,869·8 | 4,996.1 | 5,275·8 | 5,697·4 | 5,766·0 | 6,147·9 |
| (4) சந்தை விலைகளின்படி அரசாங்க நுகர்ச்சி(இலட்சம் ரூபாய்களில்)... | 881·3 | 119.0 | 926·2 | 979·4 | 1,010·6 | 1,090·1 | 1,156·7 | 1,158·3 |
| (5) சந்தை விலைகளின்படி மொத்த விலையான உள்நாட்டு மூலதன ஆக்கம் (இலட்சம் ரூபாய்களில்)... | 1,104·6 | 1,008·4 | 1,022·9 | 1,080·3 | 1,081·1 | 1,106·3 | 1,043·1 | 1,114·3 |
| (6) பொருட்களினதும் சினைக்கொள் அல்லாத சேவைகளினதும் ஏற்றுமதிகள் (இலட்சம் ரூபாய்களில்) | 2,016.0 | 2,010·6 | 1,907·2 | 1,971·0 | 1,902·6 | 1,937·1 | 2,094·5 | 1,861·7 |
| (7) பொருட்களினதும் சினைக்கொள் அல்லாத சேவைகளினதும் இறக்குமதிகள் (இலட்சம் ரூபாய்களில் | 2,175.7 | 2,208·5 | 1,972·0 | 2,070·3 | 2,030·9 | 2,101·9 | 2,060·9 | 2,144·5 |
| (8) சினைக்கொள் விலைகளின்படி சராசரி ஆளுக்குரிய மொத்தத் தேசிய உற்பத்தி(ரூபாய்களில்) . | 621 | 633 | 620 | 629 | 637 | 658 | 662 | 655 |
| (9) சராசரி ஆளுக்குரிய மொத்த உள்நாட்டுச் செலவு (ரூபாய்களில் | 692 | 697 | 677 | 675 | 689 | 715 | 706 | 731 |
| (10) 1959 ஆம் ஆண்டுச் சினைக்கொள் விலைகளின்படி மொத்தத் தேசிய உற்பத்தி (இலட்சம் ரூபாய்களில்) | 5,978·4 | 6,306·5 | 6,488·1 | 6,733·9 | 6,856·4 | 7,170·2 | 7,299·7 | 7,416·3 |
| (11) 1959 ஆம் ஆண்டுச் சினைக்கொள் விலைகளின்படி சராசரி ஆளுக்குரிய மொத்தத் தேசியஉற்பத்தி (ரூபாய்களில்) .. | 621 | 637 | 638 | 645 | 640 | 654 | 650 | 645 |
| **(ஆ) குறிகாட்டிப் புள்ளிகள் (1959 = 100.0)** | | | | | | | | |
| (1) சினைக்கொள்விலைகளின்படி மொத்தத் தேசிய உற்பத்தி | 100·0 | 104·8 | 105·5 | 109·9 | 114·1 | 120·8 | 124·4 | 125·9 |
| (2) சந்தை விலைகளின்படி மொத்த உள்நாட்டுச் செலவு ... | 100·0 | 103·6 | 103·5 | 106·0 | 110·8 | 117·9 | 119·1 | 126·2 |
| (3) சந்தை விலைகளின்படி தனியார் நுகர்ச்சி ... | 100·0 | 107·3 | 104·0 | 106·7 | 112·7 | 121·7 | 123·2 | 131·3 |
| (4) சந்தை விலைகளின்படி அரசாங்க நுகர்ச்சி ... | 100·0 | 103·4 | 105·1 | 111·1 | 114·7 | 123·7 | 131·2 | 131·4 |
| (5) சந்தை விலைகளின்படி மொத்த நிலையான உள்நாட்டு மூலதன ஆக்கம் ... | 100·0 | 91·3 | 92·6 | 97·8 | 97·9 | 100·2 | 94·4 | 100·9 |
| (6) பொருட்களினதும் சினைக்கொள் அல்லாத சேவைகளினதும் ஏற்றுமதிகள் ... | 100·0 | 99·7 | 94·6 | 97·8 | 94·4 | 96·1 | 103·9 | 92·3 |
| (7) பொருட்களினதும் சினைக்கொள் அல்லாத சேவைகளினதும் இறக்குமதிகள் ... | 100·0 | 101·5 | 90·6 | 95·1 | 93.3 | 96·6 | 94·7 | 98·6 |
| (8) சினைக்கொள் விலைகளின்படி சராசரி ஆளுக்கு மொத்தத் தேசிய உற்பத்தி .. | 100·0 | 101·9 | 99·9 | 102.5 | 106.0 | 106·0 | 106·6 | 105·5 |
| (9) சராசரி ஆளுக்குரிய மொத்த உள்நாட்டுச்செலவு .. | 100·0 | 100·8 | 97·9 | 97.7 | 99·6 | 103·4 | 102·1 | 105·8 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

விளக்கக் குறிப்புகளுக்கு 45ஆம் பக்கத்தைப் பார்க்கவும்.

க. எ. பெ. விலைகள் வீழ்ச்சியுற்றமையே ஓரளவு காரணியாகவிருந்தது. அதேபோல, இறக்குமதிப் பெறுமானம் அதிகரிப்பதற்கு இறக்குமதிப் பொருட்களின் விலையதிகரிப்பு ஓரளவு காரணியாக இருந்தது. எனவே, இலங்கையின் வர்த்தக மாற்று விகிதம் கூர்மையாக வீழ்ச்சியுற்றது. இம் மாற்றங்களின் பயனாக இலங்கையின் சென்மதி நிலுவையில் உள்ள நடைமுறைக் கணக்கில் ஒரு பெருமளவான குறை ஏற்பட்டது. ஏற்றுமதி வருமானங்களின் வீழ்ச்சி, மொத்தத் தேசிய உற்பத்தியின் வளர்ச்சியைத் தடைசெய்து கொண்டிருக்கையில், வர்த்தக மாற்றுவிகிதத்தின் வீழ்ச்சி உண்மைவருமானங்களைக் குறைவடையச் செய்தது. ஆயினும் வேறோர் வகையில், இறக்குமதிகளின் அதிகரிப்பினுள் மூலப் பொருட்களும், மூலதனப் பொருட்களும் சேர்ந்துள்ளன ஆதலின் இவை உள்நாட்டு உற்பத்தியை, ஒரு சிறிய அளவால் மாத்திரம் என்றாலும், உயரச் செய்வதற்கும், தனியார் துறை, அரசாங்க கூட்டுத்தாபனங்கள் ஆகியனவற்றின் மூலதன ஆக்கத்தை ஓரளவு கணிசமான அளவால் அதிகரிப்பதற்கும் துணையாய் இருந்தன.

நடைமுறைச் சினைக் கொள்விலைகளின்படியான மொத்தத் தேசிய உற்பத்தியும் அதன் கூறுகளும் அட்டவணை II (அ) 2இல் காட்டப்பட்டுள்ளன.

இவ் அட்டவணையின்படி, மொத்தத் தேசிய ஏற்றுமதிகளின் பெறுமானம் 1965ஆம் ஆண்டில் 735 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்ததற்கெதிராக 1966ஆம் ஆண்டில் 2399 இலட்சம் ரூபாய்களால் வீழ்ச்சியுற்றது. இரப்பரின் ஏற்றுமதிப் பெறுமானம் 11·0 சதவீதத்தால் உயர்வுற்றதாயினும், தேயிலை, தெங்குப் பொருட்கள், ஆகியனவற்றின் பெறுமானங்கள் முறையே 15·1 சதவீதத்தாலும், 28·1 சதவீதத்தாலும் வீழ்ச்சியடைந்தன. தேயிலை, தெங்குப் பொருட்கள் ஆகியனவற்றின் ஏற்றுமதிப் பெறுமானங்களிற் காணப்பட்ட வீழ்ச்சி, அவற்றின் க. எ. பெ. விலைகளும் ஏற்றுமதி அளவுகளும் குறைவுற்றமையால் ஏற்பட்டது. மத்திய வங்கியின் குறிகாட்டிகளின்படி, தேயிலையின் ஏற்றுமதி அளவும், சராசரிக் க. எ. பெ. விலையும் முறையே 10·8 சதவீதத்தாலும் 4·5 சதவீதத்தாலும் வீழ்ச்சியுற்றன எனத் தெரிகின்றது. மூன்று பிரதான தெங்குப் பொருட்களினதும் ஏற்றுமதி அளவு தேங்காய் நியதியின்படி 20·4 சதவீதத்தால் குறைவுற்று அவற்றின் சராசரிக் க. எ. பெ. விலை 10·1 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றும் காணப்பட்டன. இப் பொருட்களின் ஏற்றுமதி அளவில் ஏற்பட்ட வீழ்ச்சி, பாதகமான வானிலையின் காரணமாக உற்பத்தி குறைவுற்றமையைப் பிரதிபலிக்கின்றது. இரப்பரைப் பொறுத்தவரையில், புனர்நடுகை செய்யப்பட்ட நிலங்களிலிருந்து உற்பத்திக்குவரும் நிலப்பரப்பு வருடாவருடம் அதிகரித்துக் கொண்டுவருவதைத் தொடர்ந்து இரப்பரின் உற்பத்தியிலும் தொடர்ச்சியான அதிகரிப்பு ஏற்பட்டமையால் இரப்பரின் ஏற்றுமதி அளவு உயர்வுற்றது. இரப்பரின் சராசரி க. எ. பெ. விலை 1·1 சதவீதத்தால் வீழ்ச்சியுற்ற போதிலும் அவற்றின் ஏற்றுமதிப் பெறுமானம் 11·0 சதவீதத்தால் அதிகரித்தது.

உள்நாட்டுப் பொருள்களின் மொத்தப் பெறுமானம் 1965ஆம் ஆண்டில் 4·0 சதவீதத்தால் அதிகரித்திருந்தமைக்கு எதிராக, 1966ஆம் ஆண்டில் 12·5 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றது. ஏற்றுமதிப் பொருட்களின் கையிருப்புக்களின் பெறுமானம் 1966ஆம் ஆண்டில் 83 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்ததென மதிப்பிடப்பட்டுள்ளது. நிகர உற்பத்தியின்படியுள்ள விபரங்களின்படி ஏற்றுமதித்துறை உதவிய தொகை 1965ஆம் ஆண்டில் 2·4 சதவீதத்தால் அதிகரித்தமைக்கெதிராக 1966ம் ஆண்டில் 10·3 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றது.

ஏற்றுமதித் துறையின் போக்கிற்கு மாறானமுறையில், உள்நாட்டு நுகர்ச்சிக்கான உற்பத்திகளின் ஆக்கம் தடையெதுவுமின்றி விரிவுற்றதுமல்லாமல் கடந்த வருடத்திலும் பார்க்கக் கூடுதலான அதிகரிப்பையும் பதிவுசெய்தது. 1964ஆம் ஆண்டில் 505

இலட்சம் புசல்களாக இருந்த நெல் உற்பத்தி 1965ஆம் ஆண்டில் 363 இலட்சம் புசல்களாக வீழ்ச்சியுற்றதெனினும், 1966ஆம் ஆண்டில் அது பெரிதும் மீழ்ச்சியடைந்து 461 இலட்சம் புசல்களாக விளங்கி, 27·0 சதவீதமான அதிகரிப்பைக் காட்டிற்று. நுகர்ச்சிக்கான கைத்தொழிற் பொருட்களின் நிகர உற்பத்தி 1965ஆம் ஆண்டில் 1·0 சதவீதத்தால் ( திருத்தி அமைக்கப்பட்ட மதிப்பீடுகளின்படி ) வீழ்ச்சியுற்றதற்கெதிராக 1966ஆம் ஆண்டில் 4·5 சதவீதங் கொண்ட மிதமான அதிகரிப்பைக் காட்டிற்று. கைத்தொழில் உற்பத்தியில் ஏற்பட்ட இவ்வதிகரிப்பிற்கு ஓரளவு காரணியாக மூலப் பொருட்களின் இறக்குமதி அதிகரிப்பு இருந்ததென்பது சுங்கப் புள்ளி விபரங்களிலிருந்து தெரிகிறது. 1966ஆம் ஆண்டின்போது உற்பத்தி அதிகரிப்பில் மேம்பட்டுக் காணப்பட்ட பிரதான பொருட்களாவன விஸ்கோத்து, இனிப்புப் பண்டங்கள், பாதரட்சைகள், சில வகையான இரசாயனப் பொருட்கள், கடதாசிப் பொருட்கள் முதலியனவாகும். மீன் உற்பத்தி 10·0 சதவீதத்தால் அதிகரித்ததெனத் தற்காலிகமாக மதிப்பிடப்பட்டுள்ளது. இவ்வதிகரிப்பு 1965ஆம் ஆண்டில் ஏற்பட்ட 11·1 சதவீத அதிகரிப்பிலும் பார்க்க ஓரளவு குறைவானதாகும். அரசாங்கச் சேவைகள், போக்குவரத்துச் சேவைகள் ஆகியனவற்றின் நிகர உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்பு உள்நாட்டுத் துறையின் விரிவிற்கு ஓரளவு உதவிபுரிந்தது. அரசாங்கச் செலவில் ஏற்பட்ட உயர்ச்சி, கூலிகள், சம்பளங்கள் ஆகியனவற்றின் பேரில் எழுந்த அதிகரித்த செலவுகளைப் பிரதிபலித்திருக்கையிற், போக்குவரத்தில் ஏற்பட்ட உயர்ச்சி அரசாங்கத் துறையின் போக்குவரத்துச் சேவைகளின் விரிவைப் பிரதிபலிக்கின்றது. எனவே, உள்நாட்டுத் துறையின் நிகர உற்பத்தி 1965ஆம் ஆண்டில் 2·7 சதவீதத்தால் அதிகரித்ததற்கெதிராக 1966ஆம் ஆண்டில் 4·7 சதவீதம் கொண்ட அதிகரிப்பைக் காட்டிற்று.

உள்நாட்டுத் துறையினதும் ஏற்றுமதித் துறையினதும் மொத்தத் தொகையான நிகர உற்பத்தி, அதாவது, மொத்த உள்நாட்டு உற்பத்தி, 1·6 சதவீதத்தால் அதிகரித்தது. 1965ஆம் ஆண்டில் இவ்வதிகரிப்பு 2·7 சதவீதமாக உள்ளது. வெளியூர்களிலிருந்து கிடைத்த நிகர சீனை வருமானம், அதாவது முதலீட்டு வருமானம், 1965ஆம் ஆண்டில் 154 இலட்சம் ரூபா கொண்ட வெளி ஓட்டமாக இருந்ததிற்கெதிராக 1966ஆம் ஆண்டில் மேலும் அதிகரித்து 421 இலட்சம் ரூபா கொண்ட வெளியோட்டத்தைக் காட்டிற்று. இதன் விளைவாக 1965ஆம் ஆண்டில் 1·6 சதவீதத்தால் அதிகரித்த மொத்தத் தேசிய உற்பத்தி 1966ஆம் ஆண்டிற் குறைவுற்று 1·3 சதவீதமான அதிகரிப்பைக் காட்டிற்று.

கடந்த சில ஆண்டுகளாக மொத்தத் தேசிய உற்பத்தியின் வளர்ச்சியிற் காணப்பட்ட ஒரு முக்கியமான அம்சம் யாதெனில், ஏற்றுமதித் துறையின் நிகர உற்பத்தி, திடகாத்திரமின்றி ஏற்றவிறக்கங்களுடைய தன்மையுள்ளதாய் அமைந்திருக்கையில், உள்நாட்டிற்கான உற்பத்தி தடையற்ற விரிவுடையதாய் அமைந்துள்ளதென்பதேயாகும். இத் தன்மையைப் பிரதிபலித்து மொத்தத் தேசிய உற்பத்தித் தொகையில் உள்நாட்டிற்கான உற்பத்தித்துறையின் பங்கு 1959ஆம் ஆண்டிலிருந்த 76·1 சதவீதத்திலிருந்து 1966ஆம் ஆண்டில் 82·1 சதவீதத்திற்கு அதிகரித்துள்ளது.

உற்பத்தியாளரின் விலைகளின்படி உள்நாட்டில் உற்பத்தியான பொருட்களின் விபரங்கள் அட்டவணை II அ (3) இல் காட்டப்பட்டுள்ளன. அரிசி, மீன் ஆகியனவற்றின் உற்பத்திப் பெறுமானங்கள் 1966ஆம் ஆண்டிற் கணிசமாக அதிகரித்தன. 1965ஆம் ஆண்டிலும் பார்க்க 1966ம் ஆண்டின் நெல் விளைவு உயர்ந்தமையைப் பிரதிபலித்து அரிசியின் பெறுமானம் 28·1 சதவீதத்தால் அதிகரித்தது. 1966ஆம் ஆண்டில் மீன்பிடித் தொழில் அதிகரித்ததைத் தொடர்ந்து மீன் உற்பத்தியின் பெறுமானம் 10·0 சதவீதத்தால் அதிகரித்ததென மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

## அட்டவணை II (அ) 2

## நடைமுறைச் சினைக்கொள் விலைகளின்படி மொத்தத் தேசிய உற்பத்தி

| | பத்து இலட்சம் ரூபாய்களில் | | | | | | | | சதவீத மாற்றம் | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1959 | 1960 | 1961 | 1962 | 1963 | 1964 | 1965 | 1966 | 1960/1959 | 1961/1960 | 1962/1961 | 1963/1962 | 1964/1963 | 1965/1964 | 1966/1965 |
| **I. ஏற்றுமதிக்கான உற்பத்தி** | | | | | | | | | | | | | | | |
| (i) உள்நாட்டு ஏற்றுமதிகள்: ஏற்றுமதிவிலைப் பெறுமானம் | 1,692·1 | 1,774·8 | 1,680·5 | 1,766·1 | 1,704·5 | 1,842·4 | 1,915·9 | 1,676·0 | + 4·9 | — 5·3 | + 5·1 | — 3·5 | + 8·1 | + 4·0 | —12·5 |
| கையிருப்புகளில் ஏற்பட்ட மாற்றத்தின் பெறுமானம் | — 1·5 | — 39·3 | + 15·3 | — 34·2 | + 3·2 | — 38·6 | — 67·4 | + 8·3 | | | | | | | |
| இறக்குமதிசெய்து பயன்படுத்திய பொருட்களைத்தவிர்த்து(சந்தைப்பெறுமானத்தில்) | —124·2 | —119·7 | —135·0 | —151·4 | —160·4 | —166·3 | —170·6 | —174·3 | | | | | | | |
| ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களின் பகிர்வுச்செலவு தவிர்த்து ... ... | —104·1 | —109·3 | —113·8 | —122·6 | —118·7 | —127·9 | —131·6 | —122·4 | | | | | | | |
| தேறிய உற்பத்தி ... | 1,462·3 | 1,506·5 | 1,447·0 | 1,457·9 | 1,428·6 | 1,509·6 | 1,546·3 | 1,387·6 | + 3·0 | — 4·0 | + 0·8 | — 2·0 | + 5·7 | + 2·4 | —10·3 |
| (ii) திருப்பி ஏற்றுமதி செய்யப்பட்டவைகள்;... | 2·5 | 2·0 | 2·0 | 1·6 | 1·1 | 1·3 | 1·2 | 0·9 | | | | | | | |
| **கூட்டப்பட்ட பெறுமானம் ... ஏற்றுமதிக்கான உற்பத்தி: தேறிய உற்பத்தி** | 1,464·8 | 1,508·5 | 1,449·0 | 1,459·5 | 1,429·7 | 1,510·9 | 1,547·5 | 1,388·5 | + 3·0 | — 3·9 | + 0·7 | — 2·0 | + 5·7 | + 2·4 | —10·3 |
| **11· உள்நாட்டு பாவனைக்கான உற்பத்தி: (தேறிய உற்பத்தி)** | | | | | | | | | | | | | | | |
| (i) விவசாயமும், வனவியலும்,கால்நடையும் மீன்பிடித்தலும் ... | 1,358·9 | 1,422·4 | 1,469·8 | 1,509·6 | 1,616·5 | 1,662·9 | 1,585·7 | 1.750·5 | + 5·1 | + 3·3 | + 2·7 | + 7·1 | + 2·9 | — 4·6 | +10·4 |
| (ii) கைத்தொழில்(முன்பு சேர்க்கப்படாதவைகள்) | 224·9 | 270·7 | 296·2 | 343·6 | 403·8 | 417·7 | 413·4 | 432·0 | +20·4 | + 9·4 | +16·0 | +17·5 | + 3·4 | — 1·0 | + 4·5 |
| (iii) மூலதன அபிவிருத்தி (பொருட்களும், சேவைகளும்) | | | | | | | | | | | | | | | |
| (அ) அரசாங்கம் (ஆ) பொதுமுயற்சிகள் ... | 222·9 | 188·7 | 236·5 | 266·7 | 290·5 | 250·9 | 294·5 | 267·8 | —15·3 | +25·3 | +12·8 | + 8·9 | —13·6 | +17·4 | — 9·1 |
| (இ) தனியார் துறையும் அரசாங்க கூட்டுத்தாபனங்களும் ... | 321·6 | 320·9 | 317·8 | 341·1 | 360·3 | 392·8 | 393·0 | 352·2 | — 0·2 | — 1·0 | + 7·3 | + 5·6 | + 9·0 | + 0·1 | —10·4 |
| (iv) போக்குவரத்தும் செய்தி அறிவிப்பும் (அரசாங்கம் அல்லாதவை) ... | 468·5 | 521·5 | 504·4 | 529·3 | 529·4 | 605·7 | 649·7 | 700·4 | +11·3 | — 3·3 | + 4·9 | ... | +14·4 | + 7·3 | + 7·8 |
| (v) வர்த்தகம் (அரசாங்கம் அல்லாதவை) ... | 672·5 | 698·9 | 672·8 | 711·3 | 733·5 | 800·4 | 830·5 | 886·6 | + 3·9 | — 3·7 | + 5·7 | + 3·1 | + 9·1 | + 3·8 | + 6·8 |
| (vi) குடியிருப்புகளின் உடைமை ... | 168·5 | 178·4 | 196·0 | 204·8 | 223·1 | 237·9 | 310·9 | 317·7 | + 5·9 | + 9·9 | + 4·5 | + 8·9 | + 6·6 | +30·7 | + 2·2 |
| (vii) அரசாங்கம் (மு. சே. ப.) ... | 701·6 | 754·7 | 759·0 | 791·7 | 820·8 | 869·3 | 901·2 | 943·4 | + 7·6 | + 0·6 | + 4·3 | + 3·7 | + 5·9 | + 3·7 | + 4·7 |
| (viii) சேவைகள் (மு. சே. ப.) ... | 415·9 | 444·8 | 447·0 | 457·4 | 469·0 | 510·1 | 524·9 | 532·1 | + 6·9 | + 0·5 | + 2·3 | + 2·5 | + 8·8 | + 2·9 | + 1·4 |
| மொத்தம் ... | 4,550·3 | 4,801·0 | 4,899·9 | 5,155·3 | 5,446·9 | 5,747·7 | 5,903·8 | 6,182·7 | + 5·5 | + 2·1 | + 5·2 | + 5·6 | + 5·5 | + 2·7 | + 4·7 |
| **III. மொத்த உள்நாட்டு உற்பத்தி** ... | 6,015·1 | 6,309·5 | 6,348·9 | 6,614·8 | 6,876·6 | 7,258·6 | 7,451·3 | 7,571·2 | + 4·9 | + 0·6 | + 4·2 | + 4·0 | + 5·6 | + 2·7 | + 1·6 |
| **IV. வெளிநாட்டிலிருந்துவந்த தேசிய சினை வருமானம்** ... | — 36·7 | — 44·2 | — 39·9 | — 46·5 | — 52·5 | — 35·7 | — 15·4 | — 42·1 | | | | | | | |
| **V. மொத்த தேசிய உற்பத்தி** ... | 5,978·4 | 6.265·3 | 6,309·0 | 6,568·3 | 6,824·1 | 7,222·9 | 7,435·9 | 7,529·1 | +4·8 | + 0·7 | + 4·1 | + 3·9 | + 5·8 | + 2·9 | + 1·3 |

விளக்கக் குறிப்புகளுக்கு 45ஆம், 46ஆம் பக்கங்களைப் பார்க்கவும்.

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

## அட்டவணை II (அ) 3

### உற்பத்தியாளர்களின் நடைமுறை விலைகளின்படி உள்நாட்டு நுகர்ச்சிக்கென உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள்

| | பத்து இலட்சம் ரூபாய்களில் | | | | | | | | சதவீத மாற்றம் | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1959 | 1960 | 1961 | 1962 | 1963 | 1964 | 1965 | 1966 | 1960/1959 | 1961/1960 | 1962/1961 | 1963/1962 | 1964/1963 | 1965/1964 | 1966/1965 |
| **1. விவசாயம், வனவியல், கால்நடை, மீன்பிடித்தல்** | | | | | | | | | | | | | | | |
| (i) அரிசி ... | 399.7 | 472·3 | 475·0 | 524·4 | 533·7 | 543·5 | 391·1 | 501·0 | +18·2 | + 0·6 | +10·4 | + 1·8 | + 1·8 | —28·0 | +28·1 |
| (ii) தேங்காயும் தெங்குஉற்பத்திப் பொருட்களும் ... | 208·1 | 167·7 | 147·3 | 135·3 | 178·7 | 180·3 | 212·2 | 230·2 | —19·4 | —12·2 | — 8·1 | +32·1 | + 0·9 | +17·7 | + 8·5 |
| (iii) தேயிலை ... | 53·5 | 55·8 | 55·8 | 54·8 | 60·3 | 61·7 | 65·9 | 60·4 | + 4·3 | ... | — 1·8 | +10·0 | + 2·3 | + 6·8 | — 8·3 |
| (iv) ஏனைய உணவுப்பயிர்கள் ... | 326·7 | 349·9 | 382·4 | 382·4 | 390·4 | 411·3 | 423·4 | 438·6 | + 7·1 | + 9·3 | ... | + 2·1 | + 5·4 | + 2·9 | + 3·6 |
| (v) புகையிலை ... | 13·7 | 15·2 | 18·8 | 21·4 | 22·1 | 22·6 | 23·1 | 23·7 | +10·9 | +23·7 | +13·8 | + 3·3 | + 2·3 | + 2·2 | + 2·6 |
| (vi) வெற்றிலையும் பாக்கும் ... | 60·3 | 64·7 | 65·8 | 60·3 | 63·0 | 58·5 | 52·7 | 50·6 | + 7·3 | + 1·7 | — 8·4 | + 4·5 | — 7·1 | — 9·9 | — 4·0 |
| (vii) விறகு ... | 62·6 | 64·7 | 67·3 | 69·0 | 70·6 | 72·5 | 73·2 | 74·3 | + 3·4 | + 4·0 | + 2·5 | + 2·3 | + 2·7 | + 1·0 | + 1·5 |
| (viii) கால்நடை ... | 141·5 | 133·6 | 139·4 | 135·6 | 149·7 | 155·5 | 186·7 | 193·4 | — 5·6 | + 4·3 | — 2·7 | +10·4 | + 3·9 | +20·1 | + 3·6 |
| (ix) மீன் ... | 60·3 | 68·7 | 86·1 | 100·8 | 125·4 | 137·4 | 152·6 | 167·9 | +13·9 | +25·3 | +17·1 | +24·4 | + 9·6 | +11·1 | +10·0 |
| (x) ஏனைய விவசாய வனவியற் பொருட்கள் ... | 52·1 | 54·7 | 56·5 | 58·1 | 62·2 | 64·0 | 60·9 | 67·3 | + 5·0 | + 3·3 | + 2·8 | + 7·1 | + 2·9 | — 4·8 | +10·5 |
| இறக்குமதிசெய்து பாவிக்கப்பட்ட பொருட்களின் நீக்கம் ... | —24·6 | —24·9 | —24·6 | —32·5 | —39·6 | —44·4 | —46·7 | —56·9 | | | | | | | |
| உள்நாட்டு உற்பத்தியினூல் கூட்டப்பட்ட பெறுமானம் ... | 1,353·9 | 1,422·4 | 1,469·8 | 1,509·6 | 1,616·5 | 1,662·9 | 1,585·7 | 1,750·5 | + 5·1 | + 3·3 | + 2·7 | + 7·1 | + 2·9 | — 4·6 | +10·4 |
| **2. கைத்தொழில் (மூலதன அபிவிருத்தியைத் தவிர்த்து)** | | | | | | | | | | | | | | | |
| (i) ஆலைக் கைத்தொழில்கள் ... | 313·9 | 379·1 | 416·2 | 453·7 | 594·7 | 624·0 | 652·7 | 721·2 | +20·8 | + 9·8 | + 9·0 | +31·1 | + 4·9 | + 4·6 | +10.5 |
| (ii) குடிசைக் கைத்தொழில்கள் ... | 109·9 | 112·6 | 115·9 | 119·3 | 127·2 | 131·0 | 135·1 | 141·2 | + 2·5 | + 2·9 | + 2·9 | + 6·6 | + 3·0 | + 3·1 | + 4·5 |
| இறக்குமதிசெய்து பாவிக்கப்பட்ட பொருட்களின் நீக்கம் | —168·4 | —167·1 | —190·5 | —166·6 | —237·8 | —245·0 | 264·1 | —310·4 | | | | | | | |
| உள்நாட்டு உற்பத்தியினூல் கூட்டப்பட்ட பெறுமானம் ... | 224·9 | 270·7 | 296·2 | 343·6 | 403·8 | 417·7 | —413·4 | 432·0 | +20·4 | + 9·4 | +16·0 | +17·5 | + 3·4 | — 1·0 | + 4·5 |

விளக்கக் குறிப்புகளுக்கு 46, 48ஆம் பக்கங்களைப் பார்க்கவும்.

மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி,
குடிசன மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்,
கைத்தொழில் திணைக்களம்,
மீன்பிடித் திணைக்களம் ஆகியன.

சிலைக் கொள்விலைகளின்படி மொத்தத் தேசிய உற்பத்தியிற் காணப்பட்ட மெது வான அதிகரிப்பிற்கு எதிராக 1966ஆம் ஆண்டின் மொத்தத் தேசிய செலவு கூர் மையாக உயர்வுற்றது. இது, இவ்வாண்டில் இறக்குமதிப் பொருட்கள் அதிகரித்த அளவிற் கிடைக்கக்கூடியதாயிருந்தமையை ஓரளவு பிரதிபலிக்கின்றது. அட்டவணை II (அ) 4 நடைமுறைச் சந்தை விலைகளின்படி மொத்தத் தேசிய செலவு விபரங்களைக் காட்டுகின்றது. இதற்குப் பதிலான வேறொரு மதிப்பீடும் அட்டவணை II அ (5)இற் தரப்பட்டுள்ளது. இது, சிலைக் கொள்விலைகளின்படியான மொத்தத் தேசிய உற் பத்தியினதும், நிகர மறைமுகவரிகளினதும் கூட்டுத் தொகையிலிருந்து பெறப்பட்டது.

1966ஆம் ஆண்டில் மொத்த நுகர்ச்சி 5·5 சதவீதத்தாலும், மூலதன ஆக்கம் 8·4 சதவீதத்தாலும், அதிகரித்ததைத் தொடர்ந்து, மொத்தத் தேசியச் செலவு 5·9 சதவீதத்தால் உயர்வுற்றது. ஒப்பிடத்தக்க 1965ஆம் ஆண்டின் மொத்தத் தேசியச் செலவில் ஏற்பட்ட உயர்ச்சி 1·0 சதவீதமாக உள்ளது. நுகர்ச்சியில் ஏற்பட்ட அதி கரிப்பு முக்கியமாகத் தனியார் துறையிலேயே காணப்பட்டது. தனியார் துறையின் நுகர்ச்சியில் ஏற்பட்ட அதிகரிப்பு 6·6 சதவீதமாக அமைந்திருக்கையில் அரசாங்கத் துறையின் நுகர்ச்சி 0·1 சதவீதத்தால் மட்டும் அதிகரித்தது. நிலையான மூலதன ஆக்கச் செலவில் ஏற்பட்ட அதிகரிப்பும் முக்கியமாக அரசாங்க கூட்டுத்தாபனங்களும் உட்பட்ட தனியார் துறையிற்றான் காணப்பட்டது. இத்துறையின் மொத்த நிலையான மூலதன ஆக்கம் 9·4 சதவீதத்தால் உயர்வுற்றிருக்கையில், அரசாங்கத் துறையின் நிலையான மூலதன ஆக்கம் 2·4 சதவீதத்தால் மட்டும் அதிகரித்தது.

சந்தை விலைகளின்படி தனியார் துறையின் நுகர்ச்சிச் செலவுகள் சம்பந்தமான விபரங்கள், அட்டவணை II (அ) (6)இல் காட்டப்பட்டுள்ளன. 1966ஆம் ஆண்டு தனியார் துறையின் மொத்த நுகர்ச்சிச் செலவில் ஏற்பட்ட 6·6 சதவீதமான அதி கரிப்பில் இறக்குமதிப் பொருட்களும், உள்நாட்டு உற்பத்திப் பொருட்களும் பங்கெடுத் திருந்தன. பிரதானமாக அரிசி, சீனி, கோதுமை மா ஆகியன அல்லாத, இறக்குமதிப் பொருட்களின் மீதுள்ள, செலவுகள் 1966ஆம் ஆண்டில் 14·9 சதவீதத்தால் அதிகரித் தமை, 1965ஆம் ஆண்டில் ஏற்பட்ட 18·2 சதவீத வீழ்ச்சிக்கு எதிர்மாறானதாகும். உள்நாட்டு உற்பத்திப் பொருட்களின் மீதுள்ள செலவுகளில் ஏற்பட்ட 7·5 சதவீதம் கொண்ட அதிகரிப்பு, 1965ஆம் ஆண்டில் ஏற்பட்ட 3·8 சதவீத அதிகரிப்பிலும் பார்க்க உயர்வானதாகும். இவ்வதிகரிப்பு நெல், மீன், நுகர்ச்சிக்கான கைத்தொழிற் பொருட் கள், ஆகியனவற்றின் உள்நாட்டு உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்புகளை ஓரளவு பிரதிபலிக்கின்றது.

நடைமுறைச் சந்தை விலைகளின்படியுள்ள மூலதன ஆக்கத்தின் விபரங்கள் அட்டவணை II (அ) 7இற் காட்டப்பட்டுள்ளன. 1966ஆம் ஆண்டில் மூலதனப் பொருட்களின் இறக்குமதி அதிகரித்ததைத் தொடர்ந்து, தனியார் துறையிலும் அர சாங்கக் கூட்டுத்தாபனங்களிலும் ஏற்பட்ட நிலையான மூலதன ஆக்கம் உயர்வுற்றது. தனியார் துறையிலும் அரசாங்க கூட்டுத்தாபனங்களிலும் ஏற்பட்ட மூலதன ஆக்கம், பொறிகள், இயந்திரங்களின் பெயரில் 27·9 சதவீதத்தாலும், போக்குவரத்துச் சாத னங்களின் பெயரில் 56·3 சதவீதத்தாலும் அதிகரித்தன. 1966ஆம் ஆண்டில் இறக் குமதி செய்யப்பட்ட மூலதனப் பொருட்களின் சராசரி கொ. கா. க. விலைகள் அதிகரித் தன என்ற தன்மையால் மேற்கூறிய மூலதன ஆக்கத்தின் உண்மைத் தொகை ஓரளவு கூடுதலானதாக அமைந்துள்ளது என்பது உணரத்தக்கது. அரசாங்கத் துறையில் உள்ள தொழிற்பாட்டுத் திணைக்களங்களில் பிரதானமாக மின்சாரத் திணைக்களத்தில் ஏற்பட்ட நிலையான மூலதன ஆக்கம் 4·6 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றது. ஏனைய அரசாங்கத் திணைக்களங்களின் மூலதன ஆக்கம் 6·0 சதவீதத்தால் அதிகரித்தது.

அரசாங்க கூட்டுத்தாபனங்களின் மூலதன ஆக்கம் சம்பந்தமான ஒரு புதிய புள்ளி விபரத் தொடர், அட்டவணை II (அ) 7 இல் தரப்பட்டுள்ளது. இவ் விபரங்கள் 1965ஆம் ஆண்டுவரையுமே கிடைக்கக் கூடியதாய் உள்ளன. இவ்விபரங்களின்படி அரசாங்க கூட்டுத்தாபனங்களின் மூலதன ஆக்கம் 1961ஆம் ஆண்டிலிருந்து நிதானமாக அதிகரித்துவந்ததென்பது அறியக் கிடக்கின்றது. அரசாங்க கூட்டுத்தாபனங்களின் மூலதன ஆக்கத்தில் ஏற்பட்ட அதிகரிப்பிற் பிரதானமாக, கட்டட ஆக்கம், பொறிகள் இயந்திரங்கள் ஆகியனவற்றின்மீது ஏற்பட்ட செலவுகளே அடங்கியுள்ளன.

### பொருள் வளங்களின் கிடைப்பனவும் அவற்றின் உபயோகமும்

உற்பத்தி, இறக்குமதி, ஆகியவற்றினூடாகக் கிடைக்கப்பெற்ற பொருள்வளங்களை ஒரு புறமாகவும், அவ்வாறு கிடைக்கப்பெற்ற பொருள்வளங்களை நுகர்ச்சி, மூலதன ஆக்கம், ஏற்றுமதி, என்பனவற்றிற்கிடையில் எவ்வாறு உபயோகிக்கப்பட்டதென்பதை மறுபுறமாகவும் அமைத்து அட்டவணை II (அ) 8 காட்டுகின்றது. ஏற்றுமதி வருமானங்கள் வீழ்ச்சியுற்ற போதிலும், பொருள் வளங்களின் கிடைப்பனவு 1965ஆம் ஆண்டில் ஏற்பட்ட வீத அதிகரிப்பைப் போன்ற அளவால் அதிகரித்து விளங்கியது. இது முக்கியமாக இறக்குமதிகள் அதிகரித்தமையால் ஏற்பட்டது. பொருள்வளங்களின் உபயோகத்தில் நுகர்ச்சி 5·5 சதவீதத்தாலும், மூலதன ஆக்கம் 8·4 சதவீதத்தாலும் அதிகரித்தன. 1965ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் அவ்வாண்டின் நுகர்ச்சி 2·0 சதவீதத்தால் அதிகரித்தும் மூலதன ஆக்கம் 5·0 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றும் காணப்பட்டன.

1965ஆம் ஆண்டிற்கு முற்பட்ட வருடங்களில் நுகர்ச்சி மூலதன ஆக்கம் ஆகியவற்றின் பேரில் எழுந்த மொத்தக் கேள்விகளிலும்பார்க்க, உள்நாட்டு உற்பத்தியிலிருந்து கிடைக்கப்பெற்ற பொருள் வளங்கள் குறைவுற்றனவாக இருந்தன என்பது நினைவிலிருக்கத்தக்கது. 1965ம் ஆண்டில் இத் தன்மை வேறுபாடு, இறக்குமதிகள் கணிசமாகக் குறைக்கப்பட்டதைத் தொடர்ந்து உற்பத்தியிலிருந்து கிடைக்கப்பெற்ற பொருள் வளங்களின் மொத்தத் தொகை, மொத்தக் கேள்விகளிலும் பார்க்க ஓரளவு உயர்ந்ததாய் விளங்கிற்று. எனினும், 1966ஆம் ஆண்டில் நிலவிய நிலமை 1965ஆம் ஆண்டிற்கு முற்பட்ட வருடங்களில் நிலவிய நிலைமையைப் போன்றதாகும். 1966ஆம் ஆண்டின் போது, மொத்தக் கேள்விகளுக்கு எதிராக உற்பத்தியிலிருந்து கிடைக்கப்பெற்ற மொத்தப் பொருள்வளங்களின் தொகையில் ஒரு கணிசமான குறை தோன்றியதென்பது அட்டவணை II (அ) 9ல் இருந்து தெரிகிறது. 1965ஆம் ஆண்டு மொத்தத் தேசிய உற்பத்தியில் 99·8 சதவீதமாக அமைந்த மொத்தத் தேசிய செலவு, 1966ஆம் ஆண்டு 104·0 சதவீதமானதாக உயர்ந்தது.

அரசாங்கத்துறையின் நுகர்ச்சி, தனியார் துறையின் நுகர்ச்சி, மூலதன ஆக்கம் ஆகியனவற்றில் இறக்குமதி வகித்த பங்கு, 1966இல் பொதுவாக அதிகரித்ததென்பதை அட்டவணை II (அ) 10 காட்டுகின்றது. இது இறக்குமதி செய்யப்பட்ட நுகர்ச்சிப் பொருட்களும், மூலதனப் பொருட்களும் அதிகரித்த அளவிற் கிடைத்தமையைப் பிரதிபலிக்கின்றது. தனியார் துறையின் நுகர்ச்சியில், இறக்குமதியின் பங்கு, கொ. கா. க். விலைப்படி, 1965ஆம் ஆண்டில் 16·4 சதவீதமாக இருந்தமைக்கு எதிராக 1966ஆம் ஆண்டில் 19·6 சதவீதத்திற்கு உயர்வுற்றது. இதேபோல மூலதன ஆக்கத்தில் இறக்குமதிகளின் பங்கு 21·0 சதவீதத்திலிருந்து 27·3 சதவீதத்திற்கு அதிகரித்தது. எனினும், 1959ஆம் ஆண்டு முதல் 1966ஆம் ஆண்டுவரையான எழு வருட காலத்தில் நுகர்ச்சியிலும், மூலதன ஆக்கத்திலும், இறக்குமதிகள் வகித்த பங்கு குறைவுற்றுக் கொண்டு வந்தது என்ற தன்மையை இவ்வட்டவணை புலப்படுத்துகின்றது. கொ. கா. க. விலைகளின்படி 1959ஆம் ஆண்டு தனியார்துறையின் நுகர்ச்சியில் 30·5 சதவீதமாக

**அட்டவணை (II) (அ) 4**

**நடைமுறைச் சந்தை விலைகளின்படி**

| | இலட்சம் ரூபாய்களில் | | | | |
|---|---|---|---|---|---|
| | **1959** | **1960** | **1961** | **1962** | **1963** |
| **1. தனியார் நுகர்ச்சி** | | | | | |
| (அ) பொருட்களினதும், சினைக்கொள் அல்லாத சேவைகளினதும் இறக்குமதிகள் | | | | | |
| (i) உணவினதும் ஏனைய சொந்த நுகர்ச்சிப் பொருட்களினதும் இறக்குமதிகள் ... | 1,812·2 | 1,907·1 | 1708·7 | 1,740·2 | 1,546·6 |
| (ii) சினைக்கொள் அல்லாத சேவைகளின் இறக்குமதிகள் ... | 177·5 | 151·8 | 136·6 | 127·8 | 129·0 |
| மொத்தம் ... | 1,989·7 | 2,058·9 | 1,845·3 | 1,868·0 | 1,675·6 |
| (ஆ) உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களும் சேவைகளும் | | | | | |
| (i) உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் ... | 2125·8 | 2,248·9 | 2,323·6 | 2,428·5 | 2,779·8 |
| (ii) குடியிருப்புக்களின் வாடகை ... | 186·3 | 197·3 | 216·4 | 225·7 | 247·8 |
| (iii) போக்குவரத்தும் மராமத்தும் ... | 240·0 | 255·1 | 271·5 | 287·5 | 293·2 |
| (iv) சேவைகள் ( மு. சே ப. ) | 444·1 | 474·8 | 477·3 | 488·6 | 501·0 |
| அரசாங்கக் கொள்வனவுகளின் நீக்கம். | —109·8 | — 41·2 | —102·0 | —132·7 | — 50·0 |
| மொத்தம் ... | 2,886·4 | 3,134·9 | 3,186·8 | 3,297·6 | 3,770·8 |
| (இ) இலங்கையில் வாசஞ் செய்யாதோர் கொள்வனவு செய்த பொருட்களினதும் சேவைகளினதும் நீக்கம் ... | —194·9 | —168·6 | —162·3 | —169·5 | —170·6 |
| **மொத்தத் தனியார் நுகர்ச்சி ...** | 4,681·2 | 5,025·2 | 4,869·8 | 4,996·1 | 5,275·8 |
| **2. அரசாங்க நுகர்ச்சி** | | | | | |
| (i) பொருட்களிலும் சேவைகளிலும் ஏற்பட்ட நடைமுறைச் செலவு - மத்திய அரசாங்கம் | 771·4 | 803·2 | 831·3 | 879·7 | 905·8 |
| (ii) பொருட்களிலும் சேவைகளிலும் ஏற்பட்ட நடைமுறைச் செலவு - உள்ளூர் ஆட்சிச் சபைகள் ... | 90·0 | 86·9 | 73·9 | 78·2 | 82·8 |
| (iii) அரசாங்கக் கட்டடங்களின் கணிக்கப்பட்ட வாடகைகள் ... | 19·9 | 20·9 | 21·0 | 21·5 | 22·0 |
| **மொத்தம் ...** | 881·3 | 911·0 | 926·2 | 979·4 | 1,010·6 |
| **3. மொத்த உள்நாட்டு நிலையான மூலதன ஆக்கம்** | | | | | |
| (i) அரசாங்கம் ... | 256·2 | 237·7 | 249·4 | 259·9 | 256·7 |
| (ii) அரசாங்க முயற்சிகள் ... | 79·6 | 79·4 | 91·7 | 103·7 | 127·3 |
| (iii) அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் ... | 78·8 | 85·5 | 74·2 | 83·3 | 91·5 |
| (iv) தனியார்துறை ... | 690·0 | 605·8 | 607·6 | 633·4 | 605·6 |
| **மொத்தம் ...** | 1,104·6 | 1,008·2 | 1,022·9 | 1,080·3 | 1,081·1 |
| **4. கையிருப்புகளில் ஏற்பட்ட மாற்றங்கள்** | | | | | |
| (i) அரசாங்கம்<br>(ii) அரசாங்க முயற்சிகள் | — 21·9 | — 14·4 | + 53·5 | + 39·8 | + 4·7 |
| (iii) அரசாங்க கூட்டுத்தாபனங்கள்<br>(iv) தனியார் துறை | + 11·8 | — 30·5 | + 15·5 | — 41·2 | + 8·4 |
| **மொத்தம்** | — 10·1 | — 44·9 | + 69·0 | — 1·4 | + 8·1 |
| **(v) மொத்த உள்நாட்டுச் செலவு ...** | 6,657·0 | 6,899·5 | 6,887·9 | 7,054·4 | 7,375·6 |
| **(vi) வெளிநாட்டிலுள்ள நிகர முதலீடு ...** | —208·0 | —220·5 | — 93·8 | —139·7 | —167·6 |
| **(vii) சர்வதேச நன்கொடைகளினதும் மாற்றங்களினதும் நிகர வரவுகளின் நீக்கம் ...** | + 11·6 | — 21·6 | — 10·9 | — 7·1 | — 13·2 |
| **(viii) மொத்தத் தேசியச் செலவு** | 6,640·6 | 6,657·4 | 6,783·2 | 6,907·6 | 7,194·8 |

விளக்கக் குறிப்புகளுக்கு 46, 49ஆம் பக்கங்களைப் பார்க்கவும்.

## மொத்தத் தேசியச் செலவு

| | | | சதவீத மாற்றம் | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1964 | 1965 | 1966 | 1959 இல் இருந்து 1960 | 1960 இல் இருந்து 1961 | 1961 இல் இருந்து 1962 | 1962 இல் இருந்து 1963 | 1963 இல் இருந்து 1964 | 1964 இல் இருந்து 1965 | 1965 இல் இருந்து 1966 |
| 1,752·6 | 1,609·1 | 1,762·6 | + 5·2 | —10·4 | + 1·8 | —11·1 | +13·3 | —8·2 | + 9·5 |
| 108·8 | 110·1 | 111·0 | —14·5 | —10·0 | — 6·5 | + 0·9 | —15·7 | + 1·2 | + 0·8 |
| **1,861·4** | **1,719·2** | **1,873·6** | **+ 3·5** | **—10·4** | **+ 1·2** | **—10·3** | **+ 1·1** | **— 7·6** | **+ 9·0** |
| 2,870·8 | 2,980·2 | 3,205·1 | + 5·8 | + 3·3 | + 4·5 | +14·4 | + 3·3 | + 3·8 | + 7·5 |
| 263·7 | 339·9 | 348·9 | + 5·9 | + 9·7 | + 4·3 | + 9·6 | + 6·6 | +28·9 | + 2·6 |
| 337·1 | 373·2 | 400·3 | + 6·3 | + 6·4 | + 5·9 | + 2·0 | +15·0 | +10·7 | + 7·3 |
| 544·8 | 561·3 | 568·8 | + 6·9 | + 0·5 | + 2·4 | + 2·5 | + 8·7 | + 3·0 | + 1·3 |
| — 50·0 | — 55·3 | — 85·0 | | | | | | | |
| 3,966·4 | 4,199·3 | 4,438·1 | + 8·6 | + 1·7 | + 3·5 | +14·3 | + 5·0 | + 5·9 | + 5·7 |
| —130·4 | —152·5 | — 163·8 | | | | | | | |
| **5,697·4** | **5,766·0** | **6,147·9** | **+ 7·3** | **— 4·1** | **+ 2·6** | **+ 5·6** | **+ 8·0** | **+ 1·2** | **+ 6·6** |
| 980·0 | 1,043·7 | 1,034·3 | + 4·1 | + 3·5 | + 5·8 | + 3·0 | + 8·2 | + 6·5 | — 0·9 |
| | 90·0 | 100·0 | — 3·5 | —15·0 | + 5·8 | + 5·9 | + 5·8 | + 2·7 | +11·1 |
| 87·6 | | | | | | | | | |
| 22·5 | 23·0 | 24·0 | + 5·0 | + 0·5 | + 2·4 | + 2·3 | + 2·3 | + 2·2 | + 4·3 |
| **1,090·1** | **1,156·7** | **1,158·3** | **+ 3·4** | **+ 1·7** | **+ 5·7** | **+ 3·2** | **+ 7·9** | **+ 6·1** | **+ 0·1** |
| 238·8 | 249·9 | 265·0 | — 7·2 | + 4·9 | + 4·2 | — 1·2 | — 7·0 | + 4·6 | + 6·0 |
| 101·8 | 129·8 | 123·8 | — 0·3 | +15·5 | +13·1 | +22·8 | —20·0 | +27·5 | — 4·6 |
| 129·1 | 148·5 } | | + 8·5 | —13·2 | +12·3 | + 9·8 | +41·1 | +15·0 } | |
| 636·6 | 514·9 } | 725·5 | —12·2 | + 0·3 | + 4·2 | — 4·4 | + 5·1 | —19·1 } | + 9·4 |
| **1,106·7** | **1,043·1** | **1,114·3** | **— 8·7** | **+ 1·5** | **+ 5·6** | **+ 0·1** | **+ 2·3** | **— 5·7** | **+ 6·8** |
| — 4·7 | + 22·0 | — 37·6 | | | | | | | |
| — 39·9 | — 56·6 | + 16·8 | | | | | | | |
| — 44·6 | — 34·6 | — 20·8 | | | | | | | |
| **7,849·2** | **7,931·2** | **8,399·7** | + 3·6 | **— 0·2** | **+ 2·4** | **+ 4·6** | **+ 6·4** | **+ 1·0** | **+ 5·9** |
| —160·4 | + 58·9 | — 304·6 | | | | | | | |
| **— 40·1** | **— 40·7** | **— 20·3** | | | | | | | |
| **7,648·7** | **7,949·4** | **8,074·8** | **+ 3·0** | **+ 1·9** | **+ 1·8** | **+ 4·2** | **+ 6·3** | **+ 3·9** | **+ 1·6** |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

அட்டவணை II (அ) 5

## நடைமுறை விலைகளின்படி மொத்த

| | 1959 | 1960 | 1961 | 1962 | 1963 | 1964 | 1965 | 1966 |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. சிளைக்கொள் விலைகளின்படி மொத்த தேசிய உற்பத்தி ... | 5,978·4 | 6,265·3 | 6,309·0 | 6,568·3 | 6,824·1 | 7,222·9 | 7,435·9 | 7,529·1 |
| 2. மான்னியங்கள் நீக்கப்பட்டபின் மறைமுக வரிகள்... | 389·5 | 413·4 | 389·5 | 472·3 | 458·5 | 430·4 | 540·6 | 587·9 |
| 3. சந்தை விலைகளின் படி மொத்த தேசிய உற்பத்தி ... | 6,367·9 | 6,678·7 | 6,698·5 | 7,040·6 | 7,282·6 | 7,653·2 | 7,976·5 | 8,117·0 |

விளக்கக் குறிப்புகளுக்கு 46ஆம் பக்கத்தைப் பார்க்கவும்.

## தேசிய உற்பத்தியின் மீது ஏற்பட்ட செலவு

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | 1959 | 1960 | 1961 | 1962 | 1963 | 1964 | 1965 | 1966 |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4. நுகர்ச்சி செலவு: தனியார் ... | 4,681·2 | 5,025·2 | 4869·8 | 4,996·1 | 5,275·8 | 5,697·4 | 5,766·0 | 6,147·9 |
| 5. நுகர்ச்சிசெலவு: அரசாங்கம் ... | 881·3 | 911·0 | 926·2 | 979·4 | 1,010·6 | 1,090·1 | 1,156·7 | 1,158·8 |
| 6. மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கம்: தனியார் துறையும் அரசாங்கக் கூட்டுத் தாபனங்களும் ... | 780·6 | 660·8 | 697·3 | 675·5 | 700·5 | 725·8 | 606·8 | 742·8 |
| 7. மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கம்: அரசாங்கமும் அரசாங்க முயற்சிகளும் | 313·9 | 302·7 | 894·6 | 403·4 | 388·7 | 335·9 | 401·7 | 351·2 |
| 8. மொத்த உள்நாட்டுச் செலவு ... | 6,657·0 | 6,899·5 | 6,887·9 | 7,054·4 | 7,375·6 | 7,849·2 | 7,931·2 | 8,899·7 |
| 9. பொருட்களினதும் சினைக்கொள் அல்லாத சேவைகளினதும் ஏற்றுமதிகள் ... | 2,016·0 | 2,010·6 | 1,907·2 | 1,971·0 | 1,902·6 | 1,987·1 | 2,094·5 | 1,861·7 |
| 10. பொருட்களினதும் சினைக்கொள் அல்லாத சேவைகளினதும் இறக்குமதிகளின் நீக்கம் ... | –2,175·7 | –2,208·5 | –1,972·0 | –2,070·3 | – 2,030·9 | – 2,101·9 | – 2,060·9 | – 2,144·5 |
| 11. சந்தை விலைகளின் படி மொத்த உள்நாட்டு உற்பத்தி ... | 6,497·3 | 6,701·6 | 6,823·1 | 6,955·1 | 7,247·3 | 7,684·4 | 7,964·8 | 8,116·9 |
| 12. வெளிநாட்டிலிருந்து வந்த நிகரசினை வருமானம் ... | –36·7 | –44·2 | –89·9 | –46·5 | –52·5 | –35·7 | –15·4 | –42·1 |
| 13. எஞ்சியவை கையிருப்புகளில் ஏற்பட்ட மறைமுக மாற்றங்களும் புள்ளி விபரத் தவறுகளும் ... | –92·7 | +21·3 | –84·7 | +132·0 | +87·8 | +4·5 | +27·1 | +42·2 |
| **14. சந்தை விலைகளின் படி மொத்த தேசிய உற்பத்தியின்மீது ஏற்பட்ட செலவு** | **6,367·9** | **6,678·7** | **6,698·5** | **7,040·6** | **7,282·6** | **7,653·2** | **7,976·5** | **8,117·0** |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

**அட்டவணை (II) (அ) 6**

## நடைமுறைச் சந்தை விலைகளின்படி தனியார்

| | இலட்சம் ரூபாய்களில் | | | | |
|---|---|---|---|---|---|
| | **1959** | **1960** | **1961** | **1962** | **1963** |
| **அ. பொருட்களினதும், சினைக்கொள் அல்லாத சேவைகளினதும் இறக்குமதிகள்** | | | | | |
| (i) அரிசியும், கோதுமை மாவும் சீனியும் ... | 484·5 | 482·2 | 513·2 | 534·0 | 516·9 |
| (ii) ஏனைய சொந்த நுகர்ச்சிப் பொருட்கள் ... | 1,327·7 | 1,424·9 | 1,195·5 | 1,206·2 | 1,029·7 |
| (iii) சினைக்கொள் அல்லாத சேவைகள் ... | 177·5 | 151·8 | 136·6 | 127·8 | 129·0 |
| மொத்தம் ... | 1,989·7 | 2,058·9 | 1,845·3 | 1,868·0 | 1,675·6 |
| **ஆ. உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களும் சேவைகளும்** | | | | | |
| (i) உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் | | | | | |
| அரிசி ... | 312·2 | 307·5 | 274·9 | 305·6 | 319·1 |
| தெங்கு உற்பத்திப் பொருட்கள் ... | 231·9 | 187·0 | 162·0 | 154·3 | 209·5 |
| தேயிலை ... | 62·7 | 67·4 | 68·9 | 70·1 | 78·2 |
| ஏனைய உணவுப் பயிர்கள் ... | 398·1 | 432·5 | 473·1 | 473·1 | 482·8 |
| புகையிலை ... | 19·5 | 21·7 | 26·9 | 30·6 | 31·5 |
| வெற்றிலையும் பாக்கும் ... | 81·0 | 86·9 | 88·3 | 80·9 | 84·6 |
| விறகு ... | 70·6 | 73·0 | 76·0 | 77·9 | 79·7 |
| கால்நடை ... | 173·9 | 168·2 | 183·9 | 180·6 | 189·6 |
| மீன் ... | 80·3 | 91·5 | 114·8 | 134·3 | 167·2 |
| ஏனைய விவசாயப் பொருட்களும், வனவியற் பொருட்களும் ... | 59·9 | 62·9 | 65·0 | 66·8 | 71·5 |
| கைத்தொழில் உற்பத்திகள் ... | 635·7 | 750·3 | 789·8 | 854·3 | 1,065·7 |
| மொத்தம் ... | 2,125·8 | 2,248·9 | 2,323·6 | 2,428·5 | 2,779·3 |
| (ii) குடியிருப்புகளின் வாடகைகள் ... | 186·3 | 197·3 | 216·4 | 225·7 | 247·3 |
| (iii) போக்குவரத்தும் செய்தி அறிவிப்பும் ... | 240·0 | 255·1 | 271·5 | 287·5 | 293·2 |
| (iv) சேவைகள் (மு. சே. ப.) | | | | | |
| தனியாட்களுக்கான நிதிச் சேவைகள் ... | 12·9 | 14·0 | 15·0 | 16·2 | 17·9 |
| பொழுது போக்கும், களியாட்டமும் ... | 24·4 | 25·2 | 26·0 | 26·7 | 27·7 |
| வீட்டுச் சேவைகள் ... | 200·1 | 203·1 | 209·6 | 217·8 | 226·6 |
| விடுதிகளும் போசனச் சாலைகளும் ... | 119·2 | 121·0 | 124·7 | 129·7 | 134·5 |
| பயில் தொழிற்சேவைகளும், நிலையச் சேவைகளும் மு. சே. ப. ... | 37·6 | 60·9 | 50·0 | 43·0 | 37·8 |
| சொந்தச் சேவைகள் மு. சே. ப. ... | 49·9 | 50·6 | 52·2 | 54·3 | 56·5 |
| மொத்தம் ... | 444·1 | 474·8 | 477·3 | 488·6 | 501·0 |
| அரசாங்க உள்நாட்டுக் கொள்வனவுகளின் நீக்கம் ... | —109·8 | — 41·2 | —102·0 | —132·7 | — 50·0 |
| **மொத்தம்** | 2,886·4 | 3,134·9 | 3,186·8 | 3,297·6 | 3,770.8 |
| **இலங்கையில் வாசம் செய்யாதோரால் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களினதும் சேவைகளினதும் நீக்கம்** ... | —194·9 | —168·6 | —162·3 | —169·5 | —170·6 |
| **மொத்தத் தனியார் நுகர்ச்சி** ... | 4,681·2 | 5,025·2 | 4,869·8 | 4,996·1 | 5,275·8 |

விளக்கக் குறிப்புகளுக்கு 46, 47ஆம் பக்கங்களைப் பார்க்கவும்.

## நுகர்ச்சிச் செலவின் அமைப்பு

| | | | சதவீத மாற்றம் | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1964 | 1965 | 1966 | 1959 இல் இருந்து 1960 | 1960 இல் இருந்து 1961 | 1961 இல் இருந்து 1962 | 1962 இல் இருந்து 1963 | 1963 இல் இருந்து 1964 | 1964 இல் இருந்து 1965 | 1965 இல் இருந்து 1966 |
| 516·7 | 598·0 | 600·8 | — 0·5 | + 6·4 | + 4·1 | | | | |
| 1,235·9 | 1,011·1 | 1,161·8 | + 7·3 | —16·1 | + 0·9 | — 3·2 | ... | +15·7 | + 0·5 |
| 108·8 | 110·1 | 111·0 | —14·5 | —10·0 | — 6·5 | —14·6 | +20·0 | —18·2 | +14·9 |
| | | | | | | + 0·9 | —15·7 | + 1·2 | + 0·8 |
| 1861·4 | 1,719·2 | 1,873·6 | + 3·5 | —10·4 | + 1·2 | —10·3 | + 1·1 | — 7·6 | + 9·0 |
| 318·3 | 235·9 | 283·2 | — 1·5 | —10·6 | +11·2 | + 4·4 | — 0·1 | —25·9 | +20·1 |
| 217·3 | 275·5 | 278·7 | —19·4 | —13·4 | — 4·8 | +35·8 | + 3·7 | +26·8 | + 1·2 |
| 78·6 | 77·5 | 78·5 | + 7·5 | + 2·2 | + 1·7 | +11·6 | + 0·5 | — 1·4 | + 1·3 |
| 508·5 | 523·3 | 541·9 | + 8·6 | + 9·4 | ... | + 2·1 | + 5·3 | + 2·9 | + 3·6 |
| 32·3 | 33·0 | 33·8 | +11·3 | +24·0 | +13·8 | + 2·9 | + 2·5 | + 2·2 | + 2·4 |
| 78·5 | 70·8 | 68·0 | + 7·3 | + 1·6 | — 8·4 | + 4·6 | — 7·2 | — 9·8 | — 4·0 |
| 81·8 | 82·6 | 83·7 | + 3·4 | + 4·1 | + 2·5 | + 2·3 | + 2·6 | + 1·0 | + 1·3 |
| 195·5 | 231·9 | 231·9 | — 3·3 | + 9·3 | — 1·6 | + 5·0 | + 3·1 | + 8·6 | ... |
| 179·2 | 204·7 | 225·1 | +13·9 | +25·5 | +17·0 | +24·5 | + 7·2 | +14·2 | +10·0 |
| 73·6 | 70·0 | 77·4 | + 5·0 | + 3·3 | + 2·8 | + 7·0 | + 2·9 | — 4·9 | +10·6 |
| 1,107·2 | 1,175·0 | 1,302·9 | +18·3 | + 5·3 | + 8·2 | +24·7 | + 3·9 | + 6·1 | +10·9 |
| 2,870·8 | 2,980·2 | 3,205·1 | + 5·8 | + 3·8 | + 4·5 | +14·4 | + 3·3 | + 3·8 | + 7·5 |
| 263·7 | 339·9 | 348·9 | + 5·9 | + 9·7 | + 4·3 | + 9·6 | + 6·6 | +28·9 | + 2·6 |
| 337·1 | 373·2 | 400·3 | + 6·3 | + 6·4 | + 5·9 | + 2·0 | +15·0 | +10·7 | + 7·3 |
| 19·3 | 21·5 | 22·3 | + 8·5 | — 7·1 | + 8·0 | +10·5 | + 7·8 | +14·0 | + 3·7 |
| 28·6 | 29·7 | 30·0 | + 3·3 | + 3·2 | + 2·7 | + 3·7 | + 3·2 | + 3·8 | + 1·0 |
| 237·3 | 243·8 | 249·1 | + 1·5 | + 3·1 | + 4·0 | + 4·0 | + 4·7 | + 2·7 | + 2·2 |
| 141·2 | 145·0 | 148·3 | + 1·5 | + 3·1 | + 4·0 | + 3·7 | + 5·0 | + 2·7 | + 2·3 |
| 59·6 | 60·3 | 56·1 | +62·0 | —17·9 | —12·2 | —13·9 | +57·7 | + 1·2 | + 7·0 |
| 58·8 | 61·0 | 63·0 | + 1·4 | + 3·2 | + 4·0 | + 4·1 | + 4·1 | + 3·7 | + 3·3 |
| 544·8 | 561·3 | 568·8 | + 6·9 | + 0·5 | + 2·4 | + 2·5 | + 8·7 | + 3·0 | + 1·3 |
| —50·0 | —55·3 | —85·0 | | | | | | | |
| 3,966·4 | 4,199·3 | 4,438·1 | + 8·6 | + 1·7 | + 3·5 | +14·3 | + 5·0 | + 5·9 | + 5·7 |
| —130·4 | —152·5 | —163·8 | | | | | | | |
| 5,697·4 | 5,766·0 | 6,147.9 | + 7·3 | — 4·1 | + 2·6 | + 5·6 | + 8·0 | + 1·2 | + 6·6 |

மூலம்; இலங்கை மத்திய வங்கி.

**அட்டவணை (II) (அ) 7**

## நடைமுறைச் சந்தை விலைகளின்படி

| | இலட்சம் ரூபாய்களில் | | | | |
|---|---|---|---|---|---|
| | 1959 | 1960 | 1961 | 1962 | 1963 |
| **(அ) தனியார் துறையும் அரசாங்கக் கூட்டுத்தாபனங்களும்** | | | | | |
| (i) மொத்த உள்நாட்டு நிலையான மூலதனஆக்கம் | | | | | |
| பயிர் நடுகையும், புனர் நடுகையும் காணி அபிவிருத்தியும் ... | 62·1 | 63·2 | 63·2 | 64·0 | 69·5 |
| கட்டட வேலையும் ஏனையசில ஆக்கத் தொழிலும் ... | 371·6 | 383·2 | 365·5 | 391·0 | 352·8 |
| இயந்திரங்களும் பொறிகளும் .. | 118·5 | 76·9 | 113·4 | 113·2 | 153·9 |
| போக்குவரத்து ... | 152·5 | 108·7 | 84·8 | 91·9 | 62·8 |
| இறக்குமதி செய்யப்பட்ட மூலதனப் பொருட்கள் (மு.சே.ப.) ... | 64·1 | 59·3 | 54·9 | 56·6 | 58·6 |
| மொத்தம் ... | 768·8 | 691·3 | 681·8 | 716·7 | 697·1 |
| (அ) தனியார் துறை ... | 690·0 | 605·8 | 607·6 | 633·4 | 605·6 |
| (ஆ) அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் ... | 78·8 | 85·5 | 74·2 | 83·3 | 91·5 |
| (ii) கையிருப்புக்களில் ஏற்பட்ட மாற்றம் | | | | | |
| தேயிலை ... | + 1·0 | —12·5 | — 3·1 | —37·1 | —16·9 |
| இரப்பர் ... | — 2·5 | —26·8 | +18·6 | + 2·9 | +20·3 |
| தேங்காயெண்ணை ... | வி.கி | வி.கி | வி.கி | வி.கி | வி.கி |
| கால்நடை ... | +13·3 | + 8·8 | ... | — 7·0 | ... |
| மொத்தம் ... | +11·8 | —30·5 | +15·5 | —41·2 | + 3·4 |
| மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கம் ... | 780·6 | 660·8 | 697·3 | 675·5 | 700·5 |
| **(ஆ) அரசாங்கமும் அரசாங்க முயற்சிகளும்** | | | | | |
| (i) மொத்த உள்நாட்டு நிலையான மூலதன ஆக்கம் ... | 335·8 | 317·1 | 341·1 | 363·6 | 384·0 |
| (ii) கையிருப்புக்களில் ஏற்பட்ட மாற்றம் | | | | | |
| இறக்குமதி செய்யப்பட்ட அரிசி, கோதுமை மா, சீனி ஆகியவை ... | +13·0 | —26·3 | —12·1 | — 2·0 | 0·1 } |
| உத்தரவாத விலைத்திட்ட நெல் ... | —34·8 | + 9·7 | +65·3 | +45·1 | 9·6 } |
| சாராயம் ... | — 0·1 | + 2·2 | + 0·3 | — 3·3 | — 5·0 |
| மொத்தம் ... | —21·9 | —14·4 | +53·5 | +39·8 | + 4·7 |
| மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கம் ... | 313·9 | 302·7 | 394·6 | 403·4 | 388·7 |
| **(இ) சகல துறைகளும்** ... | | | | | |
| (i) மொத்த உள்நாட்டு நிலையான மூலதன ஆக்கம் ... | 1,104·6 | 1,008·4 | 1,022·9 | 1,080·3 | 1,081.1 |
| (ii) கையிருப்புக்களில் ஏற்பட்ட மாற்றம் ... | —10·1 | —44·9 | +69·0 | — 1·4 | + 8.1 |
| மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கம் ... | 1094·5 | 963·5 | 1,091·9 | 1,078·9 | 1,089.2 |

விளக்கக் குறிப்புகளுக்கு 49ஆம், 50ஆம் பக்கங்களைப் பார்க்கவும்.

## மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கம்

| | | | சதவீத மாற்றம் | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1964 | 1965 | 1966 | 1960 இல் இருந்து 1961 | 1961 இல் இருந்து 1962 | 1962 இல் இருந்து 1963 | 1963 இல் இருந்து 1964 | 1964 இல் இருந்து 1965 | 1965 இல் இருந்து 1966 |
| 89·0 | 88·5 | 64·8 | | + 1·3 | + 8·6 | +28·1 | — 0·6 | —26·8 |
| 395·5 | 393·8 | 356·7 | — 4·6 | + 7·0 | — 9·9 | +12·3 | — 8·0 | — 2·0 |
| 176·5 | 119·2 | 152·4 | +47·5 | — 0·2 | —36·0 | +14·7 | —32·5 | +27·9 |
| 50·1 | 62·7 | 98·0 | —22·0 | + 8·4 | —31·7 | —20·2 | +25·2 | +56·3 |
| 54·6 | 29·2 | 53·6 | — 7·4 | + 3·1 | + 3·5 | — 6·8 | —46·5 | +83·6 |
| 765·7 | 663·4 | 725·5 | — 1·4 | + 5·1 | — 2·7 | + 9·8 | —13·4 | + 9·4 |
| 636·6 | 514·9 | | + 0·3 | + 4·2 | — 4·4 | + 5·1 | —19·1 | + 9·4 |
| 129·1 | 148·5 | 725·5 | —13·2 | +12·3 | + 9·8 | +41·1 | +15·0 | |
| —23·5 | —64·1 | +21·6 | | | | | | |
| —12·2 | —10·7 | —14·7 | | | | | | |
| — 4·2 | +10·3 | + 2·0 | | | | | | |
| ... | + 7·9 | + 7·9 | | | | | | |
| —39·9 | —56·6 | +16·8 | | | | | | |
| 725·8 | 606·8 | 742·3 | +5·5 | — 3·1 | + 3·7 | + 3·6 | —16·4 | +22·3 |
| 340·6 | 379·7 | 388·8 | + 7·6 | + 6·6 | + 5·6 | —11·3 | +11·5 | + 2·4 |
| — 4·7 | +22·0 | —37·6 | | | | | | |
| ... | ... | ... | | | | | | |
| — 4·7 | +22·0 | —37·6 | | | | | | |
| 335·9 | 401·7 | 351·2 | +30·4 | + 2·2 | — 3·6 | —13·6 | +19·6 | —12·6 |
| 1,106·3 | 1,043·1 | 1,114.3 | + 1·5 | + 5·6 | + 0·1 | + 2·3 | + 5·7 | + 6·8 |
| —44·6 | —34·6 | —20·8 | | | | | | |
| 7610·1 | 1,008·5 | 1,093·5 | +13·3 | + 1·2 | + 1·0 | — 2·5 | — 5·0 | + 8·4 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

விளங்கிய இறக்குமதியின் பங்கு, 1966ஆம் ஆண்டில் 19·6 சதவீதத்திற்கு வீழ்ச்சியுற்றது. இதேபோல, மூலதன ஆக்கத்தில் இறக்குமதிகளின் பங்கு 33·1 சதவீதத்திலிருந்து 27·3 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இப்போக்கு, இறக்குமதிப் பொருட்களுக்குப் பதிலான உள்நாட்டு நுகர்ச்சிப் பொருட்களும் மூலதனப் பொருட்களும் உபயோகிக்கப்படுதல் மெதுவாக அதிகரித்துக்கொண்டுவந்த தன்மையைப் பிரதிபலிக்கின்றது.

**கைத்தொழில் மூலங்களின்படியான மொத்த உள்நாட்டு உற்பத்தி**

மேல் விரித்துரைக்கப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியின் மதிப்பீடுகளை, இலங்கையின் கைத்தொழில் அமைப்புப் புலன்படக்கூடிய முறையிலே திருத்தி அமைத்து அட்டவணை II (அ) 11இல் காட்டப்பட்டிருக்கிறது. 1965ஆம் ஆண்டில் 42·2 சதவீதம் கொண்ட பங்கை வகித்த "விவசாயம் கால்நடை, வனவியல், மீன்பிடித்தல்" என்ற தொகுதியின் உற்பத்தி, 1966ஆம் ஆண்டில் 41·6 சதவீதத்திற்கு வீழ்ச்சியுற்றுக் காணப்பட்டது. இது ஏற்றுமதிகளின் பெறுமானம் குறைவுற்றமையைப் பிரதிபலிக்கின்றது. இதேகாலத்திற் பண்டத்தயாரிப்புகளின் பங்கு 5·8 சதவீதத்திலிருந்து 6·0 சதவீதத்திற்குச் சிறிது அதிகரித்தது.

**உண்மை உற்பத்தியும் உண்மை வருமானமும்**

உண்மை உற்பத்தியின் மதிப்பீடுகள், அதாவது நிலையான 1959ஆம் ஆண்டின் விலைகளின்படி கணிக்கப்பட்ட மொத்தத் தேசிய உற்பத்தியின் மதிப்பீடுகள், அட்டவணை II (அ) 12 இல் காட்டப்பட்டுள்ளன. நிலையான விலைகளின்படியான ஏற்றுமதிகளின் மதிப்பீட்டின்படி, 1965ஆம் ஆண்டு 2·1 சதவீதத்தால் அதிகரித்த ஏற்றுமதிகளின் உண்மைப் பெறுமானம், 1966ஆம் ஆண்டில், தேயிலை, தெங்குப் பொருட்கள், ஆகிய வற்றின் ஏற்றுமதி அளவு வீழ்ச்சியுற்றதைப் பிரதிபலித்து, 7·5 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றது. உள்நாட்டு உபயோகத்திற்கான உற்பத்திகளில், " தேயிலை, நெல், தெங்கு " என்ற தொகுதியின் உற்பத்தி 16·1 சதவீதத்தாற் கூர்மையாக அதிகரித்தமை, 1966ஆம் ஆண்டின் நெல் உற்பத்தியில் ஏற்பட்ட உயர்ச்சியைப் பிரதிபலிக்கின்றது. அரசாங்கத்தின் நிகர உற்பத்தி 1965ஆம் ஆண்டில் 3·7 சதவீதத்தால் அதிகரித்த தற்கெதிராக, 1966ஆம் ஆண்டில் 4·7 சதவீதத்தால் அதிகரித்திருக்கையில், ஏனைய பொருட்கள் சேவைகளினது உற்பத்தி 1·2 சதவீதத்தால் அதிகரித்தது. 1966ஆம் ஆண்டு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏற்பட்ட 1·9 சதவீதம் கொண்ட அதிகரிப்பு முந்தைய வருடத்தில் ஏற்பட்ட அதிகரிப்பான 1·5 சதவீதத்திலும் பார்க்க உயர்வானதாகும். எனினும், 1966ஆம் ஆண்டு முதலீட்டு வருமானங்களின் பேரில் எழுந்த நிகர வெளியோட்டம் 1965ஆம் ஆண்டிற்குரிய தொகையிலும் பார்க்கக் கூடுதலாக இருந்தது. இதன் விளைவாக நிலையான விலைகளின்படியான மொத்தத் தேசிய உற்பத்தி 1965ஆம் ஆண்டில் 1·8 சதவீதத்தால் அதிகரித்தமைக்கு எதிராக, 1966ஆம் ஆண்டில் 1·6 சதவீதத்தால் அதிகரித்தது.

1966ஆம் ஆண்டில் இலங்கையின் சனத்தொகை 2·3 சதவீதத்தால் அதிகரித்ததென மதிப்பிடப்பட்டுள்ளமை முன்பு கூறப்பட்டது. உண்மை உற்பத்தி 1·6 சதவீதத்தால் மட்டும் அதிகரித்தமையால், தனி ஆளுக்கான சராசரி உற்பத்தி 0·7 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது.

உண்மைத் தேசிய வருமானம் பற்றிய மதிப்பீடுகள் அட்டவணை II (அ) 13இல் கொடுக்கப்பட்டிருக்கின்றன. 1966இல் இலங்கையின் வர்த்தக மாற்று விகிதத்தில் ஒரு குறிப்பிடத்தக்க வீழ்ச்சியேற்பட்டமை முன்பு கூறப்பட்டது. இவ்வீழ்ச்சியால் ஏற்பட்ட உறுபலன் யாதெனில், உற்பத்தி, வெளிநாட்டு வர்த்தகம் ஆகியவற்றினூடாக இலங்கைக்குக் கிடைக்கப்பெற்ற உண்மைப் பொருள்வளங்கள் உண்மை உற்பத்தியின் மதிப்பீடுகளிற் காட்டப்பட்ட தொகையிலும் பார்க்கக் குறைவாக உள்ளது என்பதேயாகும். 1966ஆம் ஆண்டு வர்த்தக மாற்று விகிதத்தின் மாற்றத்தினால் ஏற்பட்ட பாதகமான

## அட்டவணை II (அ) 8

### நடைமுறைச் சந்தை விலைகளின்படி பொருள் வளங்களும் அவற்றின் பாவிப்பும்

| | இலட்சம் ரூபாய்களில் | | | | | | | | சதவீத மாற்றம் | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1959 | 1960 | 1961 | 1962 | 1963 | 1964 | 1965 | 1966 | 1959 இல் இருந்து 1960 | 1960 இல் இருந்து 1961 | 1961 இல் இருந்து 1962 | 1962 இல் இருந்து 1963 | 1963 இல் இருந்து 1964 | 1964 இல் இருந்து 1965 | 1965 இல் இருந்து 1966 |
| **(அ) பொருள்வளங்கள்** | | | | | | | | | | | | | | | |
| மொத்த உள்நாட்டு உற்பத்தி | 6,497·3 | 6,701·6 | 6,823·1 | 6,955·1 | 7,247·3 | 7,684·5 | 7,964·8 | 8,116·9 | + 3·1 | + 1·8 | + 1·9 | + 4·2 | + 6·0 | + 3·6 | + 1·9 |
| பொருட்களினதும் சினைக்கொள் அல்லாத சேவைகளினதும் இறக்குமதிகள் ... | 2,175·7 | 2,208·5 | 1,972·0 | 2,070·3 | 2,030·9 | 2,101·9 | 2,060·9 | 2,144·5 | + 1·5 | -10·7 | + 5·0 | - 1·9 | + 3·5 | - 2·0 | + 4·1 |
| மொத்தம் ... | 8,673·0 | 8,910·1 | 8,795·1 | 9,025·4 | 9,278·2 | 9,786·4 | 10,025·7 | 10,261·4 | + 2·7 | - 1·3 | + 2·6 | + 2·8 | + 5·5 | + 2·4 | + 2·4 |
| **(ஆ) பாவிப்பு** | | | | | | | | | | | | | | | |
| நுகர்ச்சி ... | 5,562·5 | 5,936·2 | 5,796·0 | 5,975·5 | 6,286·4 | 6,787·5 | 6,922·7 | 7,306·2 | + 6·7 | - 2·4 | + 3·1 | + 5·2 | + 8·0 | + 2·0 | + 5·5 |
| மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கம் ... | 1,094·5 | 963·3 | 1,091·9 | 1,078·9 | 1,089·2 | 1,061·7 | 1,008·5 | 1,093·5 | -12·0 | +13·3 | - 1·2 | + 1·0 | - 2·5 | - 5·0 | + 8·4 |
| பொருட்களினதும் சினைக்கொள் அல்லாத சேவைகளினதும் ஏற்றுமதிகள் ... | 2,016·0 | 2,010·6 | 1,907·2 | 1,971·0 | 1,902·6 | 1,937·1 | 2,094·5 | 1,861·7 | - 0·3 | - 5·1 | + 3·3 | - 3·5 | + 1·8 | + 8·1 | -11·1 |
| மொத்தம் ... | 8,673·0 | 8,910·1 | 8,795·1 | 9,025·4 | 9,278·2 | 9,786·4 | 10,025·7 | 10,261·4 | + 2·7 | - 1·3 | + 2·6 | + 2·8 | + 5·5 | + 2·4 | + 2·4 |

விளக்கக் குறிப்புக்களுக்கு 47 ஆம் பக்கத்தைப் பார்க்கவும்.

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

## அட்டவணை II (அ) 9

## நடைமுறைச் சந்தை விலைகளின்படி மொத்த உள்நாட்டுச் செலவும் பொருள் வளங்களும்

| | 1959 | | 1960 | | 1961 | | 1962 | | 1963 | | 1964 | | 1965 | | 1966 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | இலட்சம் ரூபாய் களில் | (7) ஆம் வரிசை யின் சத வீதம் | இலட்சம் ரூபாய் களில் | (7) ஆம் வரிசை யின் சத வீதம் | இலட்சம் ரூபாய் களில் | (7) ஆம் வரிசை யின் சத வீதம் | இலட்சம் ரூபாய் களில் | (7) ஆம் வரிசை யின் சத வீதம் | இலட்சம் ரூபாய் களில் | (7) ஆம் வரிசை யின் சத வீதம் | இலட்சம் ரூபாய் களில் | (7) ஆம் வரிசை யின் சத வீதம் | இலட்சம் ரூபாய் களில் | (7) ஆம் வரிசை யின் சத வீதம் | இலட்சம் ரூபாய் களில் | (7) ஆம் வரிசை யின் சத வீதம் |
| 1. நுகர்ச்சிச் செலவு. தனியார் ... | 4,681·2 | 72·5 | 5,025·2 | 75·5 | 4,869·8 | 71·8 | 4,996·1 | 72·3 | 5,275·8 | 73·3 | 5,697·4 | 74·5 | 5,766·0 | 72·5 | 6,147·9 | 76,1 |
| 2. நுகர்ச்சிச் செலவு. அரசாங்கம் ... | 881·3 | 13·6 | 911·0 | 13·7 | 926·2 | 13·7 | 979·4 | 14·2 | 1,010·6 | 14·0 | 1,090·1 | 14·3 | 1,156·7 | 14·6 | 1,158·3 | 14,3 |
| 3. மொத்த மூலதனஆக்கம் தனியார் துறையும், அரசாங்க கூட்டுத்தாபனங்களும் ... | 780·6 | 12·1 | 660·6 | 9·9 | 697·3 | 10·3 | 675·5 | 9·8 | 700·5 | 9·7 | 725·8 | 9·5 | 606·8 | 7·6 | 742·3 | 9,2 |
| 4. மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கம். அரசாங்க முயற்சிகள் 5. மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கம். அரசாங்கம் | 313·9 | 4·8 | 302·7 | 4·5 | 394·6 | 5·8 | 403·4 | 5·8 | 388·7 | 5·4 | 335·9 | 4·4 | 401·7 | 5·1 | 351·2 | 4,3 |
| 6. மொத்த உள்நாட்டு செலவு .. | 6,657·0 | 103·0 | 6,899·5 | 103·6 | 6,887·9 | 101·5 | 7,054·4 | 102·1 | 7,375·6 | 102·5 | 7,849·2 | 102·6 | 7,931·2 | 99·8 | 8,399·7 | 104,0 |
| 7. மொத்தத் தேசிய உற்பத்தி (திருத்தியமைக்கப்பட்டது) .. | 6,460·6 | 100·0 | 6,657·4 | 100·0 | 6,783·2 | 100·0 | 6,908·6 | 100·0 | 7,194·8 | 100·0 | 7,648·7 | 100·0 | 7,949·4 | 100·0 | 8,074·8 | 100,0 |
| 8. (7) இல் இருந்து (6) மேலதிகமாய்க் கொண்டுள்ளதைப் பின்வரும் விடயங்கள் நிரப்புகின்றன. | | | | | | | | | | | | | | | | |
| (அ) வெளிநாட்டிலுள்ள நிகர முதலீடுகளின் கரைவு ... | + 208·0 | | + 220·5 | | + 93·8 | | + 139·7 | | + 167·6 | | + 160·4 | | — 58·9 | | + 304·6 | |
| (ஆ) சர்வதேச நன்கொடைகளினதும், மாற்றங்களினதும் நிகர வருமானங்கள் | — 11·6 | | + 21·6 | | + 10·9 | | + 7·1 | | + 13·2 | | + 40·1 | | + 40·7 | | + 20·3 | |
| (அ) + (ஆ) .. | + 196·4 | | + 242·1 | | + 104·7 | | + 146·8 | | + 180·8 | | + 200·5 | | — 18·2 | | + 324·9 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

விளக்கக் குறிப்புகளுக்கு 47 ஆம் பக்கத்தைப் பார்க்கவும்.

# அட்டவணை II (அ) 10

## மொத்த உள்நாட்டுச் செலவு விடயங்களில் இறக்குமதிகளின் பங்கு *

| | 1959 | | | 1960 | | | 1961 | | | 1962 | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | தனியார் நுகர்ச்சி | அரசாங்க நுகர்ச்சி | மொத்த உள்நாட்டு நிலையான மூலதன ஆக்கம் | தனியார் நுகர்ச்சி | அரசாங்க நுகர்ச்சி | மொத்த உள்நாட்டு நிலையான மூலதன ஆக்கம் | தனியார் நுகர்ச்சி | அரசாங்க நுகர்ச்சி | மொத்த உள்நாட்டு நிலையான மூலதன ஆக்கம் | தனியார் நுகர்ச்சி | அரசாங்க நுகர்ச்சி | மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கம் |
| 1. செலவு-சந்தை விலைகளின் படி (இலட்சம் ரூபாய்களில்) ... | 4,681·2 | 881·3 | 1,104·6 | 5,025·2 | 911·0 | 1,008.2 | 4,869·8 | 926·2 | 1,022·9 | 4996·1 | 979·4 | 1,080.3 |
| 2. இறக்குமதிகளின் பங்கு கொ. கா. க. விலைகளில் | | | | | | | | | | | | |
| (அ) தொகை (இலட்சம் ரூபாய்களில்) ... | 1,426·3 | 88·1 | 365·2 | 1,364·8 | 125·8 | 336·2 | 1,165·6 | 71·2 | 305·0 | 1,104.3 | 56·7 | 309·9 |
| (ஆ) சதவீதம்... | 30·5 | 10·0 | 33·1 | 27·2 | 13·8 | 33·3 | 23·8 | 7·7 | 29·8 | 22·1 | 5·8 | 28·7 |
| 3. இறக்குமதிகளின் பங்கு சந்தை விலைகளில் | | | | | | | | | | | | |
| (அ) தொகை (இலட்சம்ரூபாய்களில்) ... | 1,989·7 | 97·3 | 565·5 | 2,058.9 | 139·0 | 518·7 | 1,845·3 | 78·7 | 471·6 | 1,868·0 | 62·7 | 478·9 |
| (ஆ) சதவீதம் .. | 42·5 | 11·0 | 51·2 | 41·0 | 15·3 | 51·4 | 37·9 | 8·5 | 46·1 | 34·7 | 6·4 | 44·3 |

| | 1963 | | | 1964 | | | 1965 | | | 1966 | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | தனியார் நுகர்ச்சி | அரசாங்க நுகர்ச்சி | மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கம் | தனியார் நுகர்ச்சி | அரசாங்க நுகர்ச்சி | மொத்த உள்நாட்டு மூலதன நுகர்ச்சி | தனியார் நுகர்ச்சி | அரசாங்க நுகர்ச்சி | மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கம் | தனியார் நுகர்ச்சி | அரசாங்க நுகர்ச்சி | மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கம் |
| 1. செலவு-சந்தை விலைகளின் படி (இலட்சம் ரூபாய்களில்) ... | 5,275.8 | 1,010·6 | 1,081·1 | 5,697.4 | 1,090·1 | 1,106·3 | 5,766·0 | 1,156.7 | 1,043·1 | 6,147.9 | 1,158·8 | 1,114·8 |
| 2. இறக்குமதிகளின் பங்கு கொ. கா. க. விலைகளில் | | | | | | | | | | | | |
| (அ) தொகை (இலட்சம் ரூபாய்களில்) ... | 983·8 | 51·8 | 292·5 | 1,431·3 | 47·2 | 294.5 | 945·3 | 59·3 | 218·7 | 1,202.9 | 80·8 | 304·4 |
| (ஆ) சதவீதம்... | 18·6 | 5·1 | 26·6 | 25·1 | 4·3 | 26·6 | 16·4 | 5·1 | 21.0 | 19·6 | 7·0 | 27·3 |
| 3. இறக்குமதிகளின் பங்கு சந்தை விலைகளில் | | | | | | | | | | | | |
| (அ) தொகை (இலட்சம்ரூபாய்களில்) ... | 1,675·6 | 57·2 | 465·5 | 1,861·4 | 52·3 | 486·3 | 1,719·2 | 65·5 | 386·7 | 1,873·6 | 89·3 | 512· |
| (ஆ) சதவீதம் .. | 31.8 | 5·7 | 43·1 | 32·7 | 4·8 | 44·0 | 29·8 | 5·7 | 37·1 | 30·5 | 7·7 | 45·9 |

* கையிருப்புக்களின் மாற்றங்களைத் தவிர்த்து.

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

# அட்டவணை II (அ) 11

## நடைமுறைச் சந்தை விலைகளின்படி மொத்த உள்நாட்டு உற்பத்தி - கைத்தொழில் மூலங்களின்படி

| கைத்தொழில் | 1959 | | 1960 | | 1961 | | 1962 | | 1963 | | 1964 | | 1965 | | 1966 | | சதவீத மாற்றம் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | தொகை | சதவீதம் | தொகை | சதவீதம் | தொகை | சதவீதம் | தொகை | சதவீதம் | தொகை | சதவீதம் | தொகை | சதவீதம் | தொகை | சதவீதம் | தொகை | சதவீதம் | 1960 இல் இருந்து 1961 | 1961 இல் இருந்து 1962 | 1962 இல் இருந்து 1963 | 1963 இல் இருந்து 1964 | 1964 இல் இருந்து 1965 | 1965 இல் இருந்து 1966 |
| I. விவசாயமும், வனவியலும், கால்நடையும், மீன்பிடித்தலும் ... | 2,841 | 47·2 | 2,953 | 46·8 | 2,941 | 46·3 | 2,990 | 45·2 | 3,067 | 44·6 | 3,193 | 44·0 | 3,147 | 42·2 | 3,151 | 41·6 | — 0·4 | + 1·6 | + 2·6 | + 4·1 | — 1·4 | + 0·1 |
| II. சுரங்கத்தொழிலும், பார்க்குழித் தொழிலும் | 10 | 0·2 | 11 | 0·2 | 11 | 0·2 | 12 | 0·2 | 12 | 0·2 | 13 | 0·2 | 16 | 0·2 | 17 | 0·2 | — 4·5 | +11·1 | + 0·8 | + 5·8 | +26·8 | + 5·6 |
| III. தயாரிப்புகள் (கட்டட ஆக்கப் பொருட்களைத் தவிர்த்து) ... | 241 | 4·0 | 284 | 4·5 | 308 | 4·8 | 355 | 5·4 | 420 | 6·1 | 437 | 6·0 | 432 | 5·8 | 456 | 6·0 | + 8·4 | +15·3 | +18·4 | + 4·2 | — 1·3 | + 5·6 |
| IV. கட்டட ஆக்கத் தொழில் (கட்டட ஆக்கப் பொருட்களையும் சேர்த்து) ... | 416 | 6·9 | 385 | 6·1 | 426 | 6·7 | 472 | 7·1 | 504 | 7·3 | 494 | 6·8 | 533 | 7·2 | 468 | 6·2 | +10·4 | +11·0 | + 6·6 | — 1·8 | + 7·8 | —12·3 |
| V. போக்குவரத்தும், களஞ்சியப்படுத்துதலும் செய்தி அறிவிப்பும் ... | 492 | 8·2 | 543 | 8·6 | 528 | 8·3 | 555 | 8·4 | 556 | 8·1 | 632 | 8·7 | 678 | 9·1 | 725 | 9·6 | — 2·8 | + 5·2 | + 0·1 | +13·7 | + 7·2 | + 6·9 |
| VI. மொத்தச் சில்லறை வியாபாரம் ... | 694 | 11·5 | 717 | 11·4 | 692 | 10·9 | 734 | 10·9 | 754 | 11·0 | 820 | 11·3 | 850 | 11·4 | 899 | 11·9 | — 3·4 | + 5·9 | + 2·8 | + 8·7 | + 3·7 | + 5·8 |
| VII. வங்கித் தொழிலும், காப்புறுதியும், ஏனைய நிதித் தொழில்களும் - | 48 | 0·8 | 52 | 0·8 | 56 | 0·9 | 59 | 0·9 | 68 | 1·0 | 71 | 1·0 | 79 | 1·1 | 85 | 1·1 | + 7·7 | + 5·7 | +15·6 | + 4·0 | +11·2 | + 6·6 |
| VIII. குடியிருப்புக்களின் உடைமை ... | 168 | 2·8 | 178 | 2·8 | 196 | 3·1 | 205 | 3·1 | 223 | 3·2 | 238 | 3·3 | 311 | 4·2 | 318 | 4·2 | + 9·9 | + 4·5 | + 8·9 | + 6·6 | +30·7 | + 2·2 |
| IX. பொதுப் பரிபாலனமும், பாதுகாப்பும் ... | 397 | 6·6 | 402 | 6·4 | 403 | 6·3 | 444 | 6·7 | 469 | 6·9 | 493 | 6·8 | 500 | 6·7 | 533 | 7·1 | + 0·2 | +10·2 | + 5·5 | + 5·3 | + 1·4 | + 6·6 |
| X. சேவைகள் (மு.சே.ப.) | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| (அ) அரசாங்க மருத்துவ, சுகாதார, கல்வி, ஒலிபரப்பு, வானமண்டல, சாஸ்திர சேவைகள் ... | 296 | 4·9 | 348 | 5·4 | 347 | 5·5 | 388 | 5·1 | 342 | 5·1 | 366 | 5·0 | 391 | 5·2 | 400 | 5·3 | + 1·5 | — 2·6 | + 1·2 | + 7·0 | +6 ·8 | + 2·3 |
| (ஆ) ஏனைய சகல சேவைகளும் | 418 | 6·9 | 441 | 7·0 | 442 | 7·0 | 452 | 6·8 | 462 | 6·8 | 502 | 6·9 | 515 | 6·9 | 521 | 6·9 | ... | + 2·3 | + 2·2 | + 8·7 | +2. ·6 | + 1·2 |
| மொத்தம் | 708 | 11·8 | 784 | 12·4 | 789 | 12·4 | 790 | 11·9 | 804 | 11·9 | 868 | 12·0 | 906 | 12·1 | 921 | 12·2 | + 0·6 | + 0·1 | + 1·8 | + 7·9 | + 4·4 | + 1·7 |
| மொத்த உள்நாட்டு உற்பத்தி | 6,015 | 100·0 | 6,310 | 100·0 | 6,349 | 100·0 | 6,615 | 100·0 | 6,877 | 100·0 | 7,259 | 100·0 | 7,451 | 100·0 | 7,571 | 100·0 | + 0·6 | + 4·2 | + 4·0 | + 5·6 | + 2·7 | + 1·6 |

விளக்கக் குறிப்புக்களுக்கு 47ஆம் பக்கத்தைப் பார்க்கவும்.

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

## அட்டவணை II (அ) 12

### நிலையான 1959-ஆம் ஆண்டுச் சிணக்கொள் விலைகளின்படி மொத்தத் தேசிய உற்பத்தி

| | நிலையான 1959 ஆம் ஆண்டுப் பெறுமானங்கள் இலட்சம் ரூபாய்களில் | | | | | | | | சதவீத மாற்றம் | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1959 | 1960 | 1961 | 1962 | 1963 | 1964 | 1965 | 1966 | 1959 இல் இருந்து 1960 | 1960 இல் இருந்து 1961 | 1961 இல் இருந்து 1962 | 1962 இல் இருந்து 1963 | 1963 இல் இருந்து 1964 | 1964 இல் இருந்து 1965 | 1965 இல் இருந்து 1966 |
| **I.** ஏற்றுமதிக்கான உற்பத்தி | | | | | | | | | | | | | | | |
| (i) உள்நாட்டு ஏற்றுமதிகள் | | | | | | | | | | | | | | | |
| ஏற்றுமதி விலைப் பெறுமானம் ... | 1,692·1 | 1 765·6 | 1,841·2 | 1,974·4 | 1,896·3 | 2,062·1 | 2,104·9 | 1,946·8 | + 4·3 | + 4·3 | + 7·2 | — 4·0 | — 8·7 | + 2·1 | — 7·5 |
| கையிருப்புகளில் ஏற்பட்ட மாற்றங்களின் பெறுமானம் ... | — 1·5 | — 36·6 | + 17·0 | — 36·5 | + 5·5 | — 44·8 | — 77·2 | + 8·0 | | | | | | | |
| இறக்குமதி செய்து உபயோகித்தபொருட்களின் நீக்கம் (சந்தைப் பெறுமானத் தின்படி) | — 124·2 | — 120·3 | — 133·3 | —157·1 | — 169 | — 178·3 | — 185·0 | — 186·4 | | | | | | | |
| ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களின் விநியோகச் செலவு நீக்கம் ... | — 104·1 | — 108·2 | — 110·2 | — 117·6 | — 114·8 | — 120·7 | —126·8 | — 120·0 | | | | | | | |
| தேறிய உற்பத்தி ... | 1,462·3 | 1,500·5 | 1,614·7 | 1,663·2 | 1,618·0 | 1,718·3 | 1,715·9 | 1,648·4 | + 2·6 | + 7·6 | + 3·0 | — 2·7 | + 6·2 | — 0·1 | — 3·9 |
| (ii) திருப்பி ஏற்றுமதி செய்யப்பட்டவைகள் கூட்டப்பட்ட பெறுமானம் ... | 2·5 | 2·0 | 2·1 | 1·8 | 1·1 | 1·2 | 1·2 | 1·0 | | | | | | | |
| மொத்த தேறிய உற்பத்தி | 1,464·8 | 1,502·5 | 1,616·8 | 1,665·0 | 1,619·1 | 1,719·5 | 1,717·1 | 1,649·4 | + 2·6 | + 7·6 | + 3·0 | — 2·8 | + 6·2 | — 0·1 | — 3·9 |
| **II.** உள்நாட்டுப் பாவனைக்கான உற்பத்தி(தேறிய உற்பத்தி) | | | | | | | | | | | | | | | |
| (i) நெல், தேயிலை, தெங்குப் பொருட்கள் ... | 642·3 | 723·1 | 731·0 | 788·4 | 843·5 | 863·9 | 711·1 | 825·8 | +12·6 | + 1·1 | + 7·9 | + 7·0 | + 2·4 | —17·7 | +16·1 |
| (ii) அரசாங்கம் (மு. சே. ப.)... | 701·6 | 754·7 | 759·0 | 791·7 | 820·8 | 869·3 | 901·2 | 943·4 | + 7·6 | + 0·6 | + 4·3 | + 3·7 | + 5·9 | + 3·7 | + 4·7 |
| (iii) ஏனைய பொருட்களும், சேவைகளும் ... | 3,206·4 | 3,370·1 | 3,421·4 | 3,538·6 | 3,623·9 | 3,751·3 | 3,984·6 | 4,033·8 | + 5·1 | + 1·5 | + 3·4 | + 2·4 | + 3·5 | + 6·2 | + 1·2 |
| மொத்தம் ... | 4,550·3 | 4,847·9 | 4,911·4 | 5,118·7 | 5,288·2 | 5,484·4 | 5,596·9 | 5,803·0 | + 6·5 | + 1·3 | + 4·2 | + 3·3 | + 3·7 | + 2·0 | + 3·7 |
| **III.** மொத்த உள்நாட்டு உற்பத்தி | 6,015·1 | 6,350·4 | 6,528·2 | 6,783·7 | 6,907·3 | 7,203·9 | 7,314·0 | 7,452·4 | + 5·6 | + 2·8 | + 3·9 | + 1·8 | + 4·3 | + 1·5 | + 1·9 |
| **IV.** வெளிநாட்டிலிருந்து தேறிய கினை வருமானம் ... | — 36·7 | — 43·9 | — 40·1 | — 49·8 | 50·9 | — 33·7 | — 14·3 | — 36·1 | | | | | | | |
| **V.** மொத்தத் தேசிய உற்பத்தி... | 5978·4 | 6,306·5 | 6,488·1 | 6,733·9 | 6856·4 | 7,170·2 | 7,299·7 | 7,416·3 | + 5·5 | + 2·9 | + 3·8 | + 1·8 | + 4·6 | + 1·8 | + 1·6 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

## அட்டவணை II (அ) 13

### உண்மைத் தேசிய வருவாயும் செலவும்

| | பத்து இலட்சம் ரூபாய்களில் | | | | | | | | சதவீத மாற்றம் | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1959 | 1960 | 1961 | 1962 | 1963 | 1964 | 1965 | 1966 | 1959 இல் இருந்து 1960 | 1960 இல் இருந்து 1961 | 1961 இல் இருந்து 1962 | 1962 இல் இருந்து 1963 | 1963 இல் இருந்து 1964 | 1964 இல் இருந்து 1965 | 1965 இல் இருந்து 1966 |
| 1. நிலையான[1] 1959ஆம் ஆண்டுச் சினைக்கொள் விலைகளின்படி மொத்தத் தேசிய உற்பத்தி ... | 5,978·4 | 6,306·5 | 6,488·1 | 6,733·9 | 6,856·4 | 7,170·2 | 7,299·7 | 7,416·3 | + 5·5 | + 2·9 | + 3·8 | + 1·8 | + 4·6 | + 1·8 | + 1·6 |
| 2. ஏற்றுமதிகள்மீது வர்த்தக மாற்று விகிதத்தில் எழுந்த பலாபலன் ... | | | | | | | | | | | | | | | |
| (i) தேயிலை ... | | — 31·9 | — 36·9 | + 1·4 | — 133·7 | — 156·0 | — 211·8 | — 317·7 | | | | | | | |
| (ii) இரப்பர் ... | | + 37·3 | — 24·5 | — 13·3 | — 55·7 | — 93·7 | — 103·5 | — 145·3 | | | | | | | |
| (iii) மூன்று பிரதான தெங்கு உற்பத்திப் பொருட்கள் ... | | — 26·0 | — 90·3 | — 79·6 | — 63·1 | — 84·4 | — 12·0 | — 44·6 | | | | | | | |
| (iv) ஏனைய உற்பத்திப் பொருட்கள் ... | | + 10·0 | + 1·1 | + 9·6 | + 10·7 | + 18·3 | + 18·4 | + 2·3 | | | | | | | |
| (v) சகல உற்பத்திப் பொருட்களும் ... | | — 10·6 | — 150·6 | — 81·9 | — 241·8 | — 315·8 | — 308·9 | — 505·3 | | | | | | | |
| 3. நிலையான 1959ஆம் ஆண்டு சினைக்கொள் விலைகளின்படி மொத்தத் தேசிய வருவாய் ... | 5,978·4 | 6,295·9 | 6,337·5 | 6,652·0 | 6,614·6 | 6,854·4 | 6,990·8 | 6,911·0 | + 5·3 | + 0·7 | + 5·0 | — 0·6 | + 3·6 | 2·0 | — 1·2 |
| 4. மறைமுக வரிகள் மானியங்கள் தவிர்த்து (சிராக்கப்பட்டவை) ... | 389·5 | 410·2 | 412·9 | 433·4 | 430·9 | 446·6 | 455·5 | 450·3 | | | | | | | |
| 5. நிலையான 1959ஆம் ஆண்டுச் சந்தை விலைகளின்படி மொத்தத் தேசியச் செலவு ... | 6,367·9 | 6,706·1 | 6,750·4 | 7,085·4 | 7,045·5 | 7,301·0 | 7,446·3 | 7,361·3 | + 5·3 | + 0·7 | + 5·0 | — 0·6 | + 3·6 | + 2·0 | — 1·1 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

பலன் 5053 இலட்சம் ரூபாய்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. 1965ஆம் ஆண்டில் ஏற்பட்ட பாதகமான பலன் 3089 இலட்சம் ரூபாய்களாகும். இதன் விளைவாக இலங்கையின் உண்மைத் தேசிய வருமானம் 1965ஆம் ஆண்டில் 2·0 சதவீதத்தால் உயர்ச்சியடைந்த தற்கெதிராக 1966ஆம் ஆண்டில் 1·2 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றதென மதிப்பிடப் பட்டுள்ளது. தனியாளுக்கான உண்மைத் தேசிய வருமானம் 1965ஆம் ஆண்டில் 0·4 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றதற்கெதிராக 1966ஆம் ஆண்டில் 3·4 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது.

### உற்பத்தியும் ஏற்றுமதியும்

பிரதான விவசாயப் பொருட்களின் உற்பத்தி அளவுகளை அட்டவணை II (அ) 14 காட்டுகின்றது. நடைமுறை விலைகளின்படியும், நிலையான விலைகளின்படியும் உள்ள ஏற்றுமதிகளின் பெறுமானங்கள் அட்டவணை II (அ) 15இல் தரப்பட்டுள்ளன. 1966ஆம் ஆண்டு இரப்பரின் உற்பத்தி தொடர்ந்தும் அதிகரித்திருக்கையில், தேயிலை, தெங்குப் பொருட்கள் ஆகியவற்றின் உற்பத்தி, முக்கியமாக, பாதகமான வானிலையின் பயனுற் குறைவுற்றன. நெல் உற்பத்தி 1964ஆம் ஆண்டு அடைந்த உச்ச விளைவான 505 இலட்சம் புசல்களிலிருந்து 1965ஆம் ஆண்டில் 363 இலட்சம் புசல்களுக்கு வீழ்ச்சியுற்று, 1966ஆம் ஆண்டிற் பெரிதும் மீழ்ச்சியடைந்து 461 இலட்சம் புசல்கள் கொண்ட விளைவைப் பதிவு செய்தது.

### அட்டவணை II (அ) 14

### பிரதான விவசாயப் பயிர்களின் உற்பத்தி அளவுகள்

| | 1960 | 1961 | 1962 | 1963 | 1964 | 1965 | 1966 | சதவீத மாற்றம் 1961 இல் இருந்து 1962 | 1962 இல் இருந்து 1963 | 1963 இல் இருந்து 1964 | 1964 இல் இருந்து 1965 | 1965 இல் இருந்து 1966 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தேயிலை (10 இலட்சம் இருத்தல்கள்) | 435 | 455 | 467 | 485 | 482 | 503 | 490 | + 2·6 | +3·9 | — 0·6 | + 4·4 | — 2·6 |
| இரப்பர் (10 இலட்சம் இருத்தல்கள் | 218 | 215 | 229 | 231 | 246 | 261 | 289 | + 6·5 | +0·9 | + 6·5 | + 6·1 | +10·7 |
| தெங்குப் பொருட்கள் (பத்து இலட்சம் தேங்காய்களுக்குச் சமமான தேங்காய்கள் அடிப்படையில்) | 2,183 | 2,601 | 2,811 | 2,557 | 3,000 | 2,681 | 2,468 | + 8·1 | —9·0 | +17·3 | —10·6 | — 7·9 |
| நெல் (10 இலட்சம் புசல்கள்) ... | 43·1 | 43·2 | 48·1 | 49·2 | 50·5 | 36·3 | 46·1 | +11·3 | +2·3 | + 2·6 | —28·1 | +27·0 |

விளக்கக் குறிப்புகளுக்கு 47ஆம் பக்கத்தைப் பார்க்கவும்.

மூலங்கள் : தேயிலைக் கட்டுப்பாட்டு அதிகாரியின் நிர்வாக அறிக்கை,
இரப்பர் கட்டுப்பாட்டு அதிகாரியின் நிர்வாக அறிக்கை,
குடிசன மதிப்புப் புள்ளி விபரத் திணைக்களம்,
இலங்கை மத்திய வங்கி.

அட்டவணை II (அ) 15

க. ஏ. பெ. ஏற்றுமதிப் பெறுமதிகள்

| | நடைமுறை விலைகளின்படி — பத்து இலட்சம் ரூபாய்களில் | | | | | | | நடைமுறை விலைகளின்படி — சதவீத மாற்றம் | | | | நியாய விலைகளின் படி — பத்து இலட்சம் ரூபாய்களில் | | | | | | | நியாய விலைகளின் படி — சதவீத மாற்றம் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1960 | 1961 | 1962 | 1963 | 1964 | 1965 | 1966 | 1962 இல் இருந்து 1963 | 1963 இல் இருந்து 1964 | 1964 இல் இருந்து 1965 | 1965 இல் இருந்து 1966 | 1960 | 1961 | 1962 | 1963 | 1964 | 1965 | 1966 | 1962 இல் இருந்து 1963 | 1963 இல் இருந்து 1964 | 1964 இல் இருந்து 1965 | 1965 இல் இருந்து 1966 |
| உள்நாட்டு ஏற்றுமதிகள் | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| தேயிலை ... | 1,097 | 1,115 | 1,149 | 1,141 | 1,142 | 1,210 | 1,027 | — 0·7 | + 0·1 | + 6·0 | —15·1 | 1,116 | 1,159 | 1,230 | 1,241 | 1,240 | 1,348 | 1,202 | + 0·9 | — 0·1 | + 8·7 | —10·8 |
| இரப்பர் ... | 378 | 260 | 290 | 257 | 290 | 304 | 338 | —11·5 | +12·9 | + 4·9 | +11·0 | 337 | 286 | 324 | 305 | 368 | 388 | 435 | — 5·9 | +20·7 | + 5·4 | +12·1 |
| மூன்று பிரதான தெங்குப் பொருட்கள் கொப்பரா, தேங்காயெண்ணெய் தேங்காய்த் துருவல் | 184 | 202 | 228 | 198 | 274 | 275 | 196 | —12·9 | +37·9 | + 0·6 | —28·9 | 208 | 294 | 324 | 256 | 343 | 269 | 213 | —21·0 | +34·4 | —21·6 | —21·1 |
| ஏனையவை ... | 116 | 104 | 99 | 109 | 137 | 127 | 116 | + 9·6 | +25·5 | — 7·2 | — 8·4 | 105 | 103 | 97 | 95 | 111 | 100 | 97 | — 2·1 | +17·0 | — 9·8 | — 3·1 |
| மொத்தம் ... | 1,775 | 1,681 | 1,766 | 1,705 | 1,842 | 1,916 | 1,676 | — 3·5 | + 8·1 | + 4·0 | —12·5 | 1,766 | 1,841 | 1,974 | 1,896 | 2,062 | 2,105 | 1,947 | — 4·0 | + 8·7 | + 2·1 | — 7·5 |
| திருப்பி ஏற்றுமதி செய்யப்பட்டவை | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| மொத்தம் ... | 57 | 52 | 42 | 26 | 34 | 33 | 24 | —38·2 | +30·8 | — 4·6 | —27·3 | 58 | 57 | 49 | 29 | 38 | 40 | 29 | —39·9 | +31·0 | + 5·3 | —27·5 |

மூலங்கள் : லங்கை சுங்கப் புள்ளி விபரங்கள்,
இலங்கை மத்திய வங்கி.

**தேயிலை :**

தேயிலை உற்பத்தியின் கீழுள்ள நிலப்பரப்பு 1965ம் ஆண்டின் முடிவிற்குரிய 594,298 எக்கர்களுக்கு எதிராக 1966ம் ஆண்டின் முடிவில் 597,117 எக்கர்களாக இருந்தது. 1965ஆம் ஆண்டில் உச்சமட்டமான 5030 இலட்சம் இருத்தல்களாக இருந்த தேயிலை உற்பத்தி 1966ம் ஆண்டில் 130 இலட்சம் இருத்தல்களால் வீழ்ச்சி யுற்றது. இது 2·6 சதவீதம் கொண்ட வீழ்ச்சியாகும். உற்பத்தியில் ஏற்பட்ட இவ்வீழ்ச்சி முக்கியமாக பாதகமான வானிலையின் பயனால் ஏற்பட்டதெனக் கூறத்தக்கது.

தேயிலை உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சியைப் பிரதிபலித்து தேயிலையின் ஏற்றுமதி அளவும் 1965ம் ஆண்டிற்குரிய 4950 இலட்சம் இருத்தல்களிலிருந்து 1966ம் ஆண்டில் 4410 இலட்சம் இருத்தல்களுக்கு வீழ்ச்சியடைந்தது. ஏற்றுமதியின் அளவு வீழ்ச்சியடைந்ததோடு சராசரி விலையும் குறைவுற்றமையால் தேயிலையின் ஏற்றுமதிப் பெறுமானம் 12100 இலட்சம் ரூபாய்களிலிருந்து 10270 இலட்சம் ரூபாய்களுக்கு வீழ்ச்சியுற்றது.

**இரப்பர்**

1966ம் ஆண்டின் இறுதியில் இரப்பர் உற்பத்தியின் கீழ் இருந்த நிலப்பரப்பு 672,592 எக்கர்களாகும். இதில் 240,919 எக்கர்கள் அல்லது 36 சதவீதமானவை, புனர்நடுகை மான்னியத்திட்டத்தின் கீழ் புனர்நடுகை செய்யப்பட்ட நிலப்பரப்பாகஉள்ளது. இத்திட்டத்தின் கீழ் 1966ம் ஆண்டிற் புனர்நடுகை செய்யப்பட்ட நிலப்பரப்பு 11,583 எக்கர்கள் என்பது முந்தைய வருடத்திற்குரிய 12,501 எக்கர்களுடன் ஒப்பிடத்தக்கது.

இரப்பர் உற்பத்தி தொடர்ந்தும் அதிகரித்து 1966ம் ஆண்டில் 2890 இலட்சம் இருத்தல்களாக விளங்கிற்று. இது 1965ம் ஆண்டிற்குரிய தொகையிலும் பார்க்க 10·7 சதவீதங்கொண்ட உயர்வாகும். இவ் உயர்ச்சி புனர்நடுகை செய்யப்பட்ட நிலப் பரப்பிலிருந்து உற்பத்திக்கு வரும் நிலப்பரப்பு அதிகரிக்கின்றமையைப் பிரதிபலிக்கின்றது. சராசரி எக்கருக்கான விளைவு 1965ம் ஆண்டிற்குரிய 560 இருத்தல்களிலிருந்து 1966ம் ஆண்டில் 609 இருத்தல்களுக்கு அதிகரித்ததென மதிப்பிடப்பட்டுள்ளது.

1966ம் ஆண்டின் இரப்பர் உற்பத்தி அதிகரித்தமையைத் தொடர்ந்து ஏற்றுமதி அளவும், 1965ஆம் ஆண்டிற்குரிய 2670 இலட்சம் இருத்தல்களிலிருந்து 2980 இலட்சம் இருத்தல்களுக்கு அதிகரித்தது. 1966ம் ஆண்டில் ஏற்பட்ட அதிகரிப்பு 12·0 சதவீத மாக உள்ளமை 1965ம் ஆண்டின் அதிகரிப்பான 5·5 சதவீதத்துடன் ஒப்பிடத்தக்கது.

**தெங்கு**

தெங்கு உற்பத்தியின் மதிப்பீடு, உள்நாட்டு நுகர்ச்சியினதும் ஏற்றுமதிகளினதும் மொத்தத் தொகைகளை தேங்காய் நியதியிற் கணித்துப் பெறப்பெற்றதாகும். இம் மதிப்பீட்டின்படி, 1965ம் ஆண்டில் 26810 இலட்சம் தேங்காய்களாக இருந்த தெங்கு உற்பத்தி, 1966ம் ஆண்டில் 7·9 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்து 24680 இலட்சம் தேங்காய்களுக்குக் குறைவுற்றது. இவ்வீழ்ச்சி, பாதகமான வானிலையின் காரணத்தால் ஏற்பட்டதாகும். தெங்குப் பொருட்களின் ஏற்றுமதி, தேங்காய் நியதியின்படி, 1965ம் ஆண்டிற்குரிய 127,40 இலட்சம் காய்களிலிருந்து 1966ம் ஆண்டில் 10290 இலட்சம் காய்களுக்கு வீழ்ச்சியுற்றது.

**நெல்**

1964ஆம் ஆண்டில் உச்சி மட்டமான 505 இலட்சம் புசல்களாக விளங்கிய நெல் உற்பத்தி, 1965ஆம் ஆண்டில் 363 இலட்சம் புசல்களுக்கு வீழ்ச்சியடைந்து, பின் 1966ஆம் ஆண்டில் பெரிதும் மீழ்ச்சிபெற்று 461 இலட்சம் புசல்களாக விளங்கிற்று. இவ்வருடத்தின் பெரும்போககால நெல் உற்பத்தி 307 இலட்சம் புசல்களாக அமைந்தமை முந்தைய வருடத்திற்குரிய 231 இலட்சம் புசல்களுடன் ஒப்பிடத்தக்கது. கடந்த ஆண்டின் சிறுபோக உற்பத்தியாகிய 132 இலட்சம் புசல்களுக்கெதிராக இவ்வாண்டின் சிறுபோக உற்பத்தி 154 இலட்சம் புசல்களெனத் தற்காலிகமாக மதிப்பிடப்பட்டுள்ளது. இரு போகங்களினதும் மொத்த உற்பத்தி இவ்வருடம் 461 இலட்சம் புசல்களாக அமைந்தமை முந்தைய வருடத்திற்குரிய 363 இலட்சம் புசல்களிலும் பார்க்க 27·0 சதவீதம் கொண்ட உயர்வைத் தெரிவிக்கின்றது. அறுவடை செய்யப்பட்ட சராசரி ஏக்கருக்கான விளைவு 1965ஆம் ஆண்டிற்குரிய 34·4 புசல்களிலிருந்து 1966ஆம் ஆண்டில் 35·9 புசல்களுக்கு அதிகரித்துள்ளது.

அரிசி நியதியின்படியான நெல் உற்பத்தி 1965ஆம் ஆண்டிலிருந்த 506,200 தொன்களிலிருந்து 1966ஆம் ஆண்டு 644,300 தொன்களுக்கு அதிகரித்துள்ளதெனத் தற்காலிகமாக மதிப்பிடப்பட்டுள்ளது. நெல் உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்பைப் பிரதிபலித்து உத்தரவாத விலைத்திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட நெல்லின் அளவும் 1965ஆம் ஆண்டிற்குரிய 213 இலட்சம் புசல்களிலிருந்து 1966ஆம் ஆண்டு 280 இலட்சம் புசல்களுக்கு அதிகரித்தது. மொத்த அரிசி நுகர்ச்சி 1965ஆம் ஆண்டிற்குரிய திருத்தப்பட்ட எண்தொகையாகிய 1,130,000 தொன்களுக்கு எதிராக 1966ஆம் ஆண்டில் 1,135,000 தொன்களாக உள்ளதெனத் தற்காலிகமாக மதிப்பிடப்பட்டுள்ளது.

## தேசிய உற்பத்தியும் செலவும் என்ற பகுதியிலுள்ள அட்டவணைகள் சம்பந்தமான விளக்கக் குறிப்புகள்

**பொது :**

1. பிரசுரிக்கப்பட்ட மூலங்கள் (இலங்கைச் சுங்கப் புள்ளி விபரங்கள் போன்றவை), சில குறித்த விடயங்களில் விசேட மூலங்கள் (உதாரணமாக, கைத்தொழில் உற்பத்திபற்றிக் கைத்தொழிற் றிணைக்களம்), ஆகியவனவற்றைத் தவிர இந்த அட்டவணைகளைத் தயாரிக்கத் தேவையான சகல மூலாதாரமான விபரங்களும் குடிசன மதிப்புப் புள்ளி விபரத் திணைக்களத்திஞற் கொடுக்கப் பட்டவை.

2. இவ்வட்டவணைகளிலுள்ள எண் தொகைகளின் கடைசி எண்கள் மட்டமாக்கப்பட்டதன் காரணமாக விடயங்களின் எண் தொகைகளைக் கூட்டும்பொழுது, அவை மொத்தங்களுடன் சரியாக ஒத்து வரமாட்டா.

3. அட்டவணைகளிலே தரப்பட்டுள்ள சதவீத மாற்றங்கள் யாவும், முதலாவது தசமதானமுடைய பத்து இலட்சம் ரூபாய்களைப் பெறுமானங்களின் அடிப்படையாகக் கொண்டு கணிக்கப்பட்டுள்ளன.

4. மு. சே. ப. — முன்பு சேர்க்கப்படாதவை.

5. 1965ஆம், 1966ஆம் ஆண்டுகளுக்கான மதிப்பீடுகள் தற்காலிகமானவை.

### அட்டவணை II (அ) 1

விடயம் (அ) (6) ஏற்றுமதி செய்யப்பட்ட வணிகப் பொருட்களின் பெறுமானம், ஏற்றுமதி விலைகளின்படி.

விடயம் (அ) (7) இறக்குமதி செய்யப்பட்ட வணிகப் பொருட்களின் பெறுமானம், கொள்விலை, காப்புறுதி, கப்பற்கூலி என்ற அடிப்படையில்.

விடயம் (அ) (8) (9) (11) தனியாளுக்கான சராசரிகளை அளவிடுவதற்குக் கீழ்க்காணும் சனத்தொகை மதிப்பீடுகள் பாவிக்கப்பட்டுள்ளன.

| | 1959 | 1960 | 1961 | 1962 |
|---|---|---|---|---|
| ஆண்டு நடுப்பகுதியின் சனத்தொகை | 9,625,000 | 9,896,000 | 10,168,000 | 10,443,000 |

| | 1963 | 1964 | 1965 | 1966 |
|---|---|---|---|---|
| ஆண்டு நடுப்பகுதியின் சனத்தொகை | 10,712,000 | 10,971,000 | 11,232,000 | 11,491,000 |

### அட்டவணை II (அ) 2

1. "அரசாங்கம்" என்பது, [விடயங்கள் II (111) (அ)வும் II (vii) ம்] மத்திய அரசாங்கத்தையும், உள்ளூர் ஆட்சியையும் அடக்கியுள்ளதாக வரைவிலக்கணம் செய்யப்பட்டதெனினும், அரசாங்கக் கூட்டுத்தாபனங்களையும், அரசாங்க முயற்சிகளையும் (அதாவது புகையிரத, மின்சாரத் திணைக்களங்கள், துறைமுக ஆணை அலுவலகம், தபால் தந்தி, உப்புத்திணைக்களங்கள் ஆகியன) தவிர்த்தாகக் கொள்ளப்பட்டுள்ளது.

2. விடயம் II (vii) "அரசாங்கம் மு. சே. ப." என்பதில் அரசாங்கக் கட்டடங்களின் கணிக்கப்பட்ட வாடகையையும் சேர்த்துள்ளது.

3. விடயம் II (iii) (அ) பின்வருவனவற்றை அடக்கியுள்ளது.:

   (அ) ஒப்பந்தத்திற் செய்யப்பட்ட அரசாங்க மூலதன வேலைகளின் தேறிய உற்பத்தி.

   (ஆ) மூலதன அபிவிருத்தியில் ஈடுபடும்போது ஏற்படுகின்ற சார்புச் சேவைகள் உதாரணமாக, அரசாங்கத்திஞல் இறக்குமதி செய்யப்பட்ட மூலதனப் பொருட்களை ஏற்றி இறக்குதல்.

4. விடயம் II (iii) (இ) பின்வருவனவற்றை அடக்கியுள்ளது :-

   (அ) கட்டட ஆக்கத் தொழில்களின் தேறிய உற்பத்தி.

   (ஆ) கட்டட ஆக்கப் பொருட்களையும், உள்நாட்டு உபயோகத்திற்கான ஏனைய மூலதனப் பொருட்களையும் உற்பத்தி செய்கின்ற கைத்தொழில்களின் தேறிய உற்பத்தி.

(இ) பயிர் நடுகையினதும், மாற்று நடுகையினதும் காணி அபிவிருத்தியினதும் தேறிய உற்பத்தி.

5. விடயம் II (iv) "போக்குவரத்தும் மராமத்தும்" (அரசாங்கம் அல்லாதவை) விடயம் II (v) 'வர்த்தகம்' (அரசாங்கம் அல்லாதவை) ஆகியவற்றுள் இத்துறைகளில் இயங்கும்போது முயற்சிகளின் தேறிய உற்பத்தி சேர்க்கப்பட்டுள்ளது. ஏற்றுமதித் துறைக்கு அளிக்கப்பட்ட சேவைகளும் இவ்விடயங்களில் அடங்கும்.

6. விடயம் II (1) "விவசாயமும், வனவியலும், கால்நடையும், மீன்பிடித்தலும்" இவ்விடயத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள தேயிலை, தெங்கு ஆகியனவற்றின் மதிப்பீடுகள், சராசரி ஆளுக்கான நுகர்ச்சி பற்றிய தரவுகளின் அடிப்படையிலேயே கணிக்கப்பட்டுள்ளன. 1959ஆம் ஆண்டிலிருந்து 1962ஆம் ஆண்டு வரையிலான மதிப்பீடுகளைக் கணிப்பதற்குப் பயன் படுத்தப்பட்ட தரவுகள் "1963ஆம் ஆண்டின் நுகர்வோர் நிதி அளவை" யிலிருந்து பெறப்பட்டிருக்கும்போது, 1963ஆம் ஆண்டு தொடக்கம் பயன்படுத்தப்பட்ட தரவுகள் "1963ஆம் ஆண்டின் நுகர்வோர் நிதி அளவை" யிலிருந்து பெறப்பட்டன. ஆகவே, 1963ஆம் ஆண்டு தொடக்கமான மதிப்பீடுகள், உண்மையாகப் பார்க்கில் அவற்றிற்கு முற்பட்ட ஆண்டுகளின் மதிப்பீடுகளுடன் நுணுக்கமாக ஒப்பிடற்குரியனவல்ல.

## அட்டவணை II (அ) 3

தேயிலை, தேங்காய் ஆகியனவற்றின் மதிப்பீடுகளுக்கு அட்டவணை II (அ) 2இல் உள்ள 6 ஆம் குறிப்பைப் பார்க்கவும்.

## அட்டவணை II (அ) 4

விடயம் I (அ) (i) பொருட்கள் சேவைகளினது சில்லறை விலைப்படி.

விடயம் I (ஆ) (i) தேயிலை, தேங்காய் ஆகியனவற்றின் மதிப்பீடுகளுக்கு அட்டவணை II (அ) 2இல் உள்ள 6ஆம் குறிப்பைப் பார்க்கவும்.

விடயம் IV (i)உம் (ii)உம்

பின்வருவனவற்றின் கையிருப்புகளில் ஏற்பட்ட மாற்றங்கள் மட்டும்-இறக்குமதி செய்யப்பட்ட அரிசி, கோதுமைமா, சீனி, உத்தரவாத விலைத்திட்ட நெல், சாராயம்.

விடயம் IV (III) தேயிலை, இறப்பர், தேங்காயெண்ணெய், கால்நடை ஆகியனவற்றின் கையிருப்பில் ஏற்பட்ட மாற்றங்கள் மட்டும்.

விடயம் V நுகர்ச்சி, மொத்த உள்நாட்டு நிலையான மூலதன ஆக்கம், கையிருப்புகளில் ஏற்பட்ட மாற்றம் ஆகியனவற்றால் எழுந்த செலவிற்குச் சமமாகின்றது.

விடயம் VI நிகர வெளிநாட்டு முதலீடுகள், நடைமுறைக் கணக்கில், தேசத்தின் மிகையாகும்.

## அட்டவணை II (அ) 5

விடயம் 2 உள்ளூராட்சி வரிகளையும் சேர்த்து.

விடயம் 8 நுகர்ச்சி, மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கம், ஆகியவற்றால் எழுந்த செலவிற்குச் சமமாகின்றது.

விடயம் 14 இவ்வட்டவணையிலுள்ள 11ஆம் 12ஆம் விடயங்களின் அட்சரகணிதத் தொகை, அட்டவணை II அ-4 இன் விடயம் viii இல் காட்டப்பட்டுள்ளபடி மொத்தத் தேசிய உற்பத்திக்குச் சமமாகின்றது. இவ்வட்டவணையின் விடயம் 14 (சந்தை விலைகளின்படி மொத்தத் தேசிய உற்பத்தியின்மீது ஏற்பட்ட செலவு) என்பதும் 11ஆம், 12ஆம் விடயங்களின் அட்சரகணிதக் கூட்டுத்தொகையிலிருந்து விடயம் 13 இல் (கையிருப்புக்களில் ஏற்பட்ட மறைமுக மாற்றங்களும், புள்ளி விபரத் தவறுகளும்) எனக்காட்டப்பட்டுள்ள தொகையால் மட்டுமே வேறுபடுகின்றது.

## அட்டவணை II (அ) 6

விடயம் ஆ (i) தேயிலை, தேங்காய் ஆகியனவற்றின் மதிப்பீடுகளுக்கு அட்டவணை II (அ) 2இல் உள்ள 6ஆம் குறிப்பைப் பார்க்கவும்.

விடயம் ஆ (iv) ஆட்களுக்கான நிதிச் சேவைகள், வங்கிகள், காப்புறுதிக் கூட்டுநிலையங்கள், ஏனைய நிதி நிலையங்கள் ஆகியவற்றால், முயற்சித் தலங்களிலும் பிறிதான குடியானவர்களுக்கு அளித்த சேவைகளின் பெறுமானம்.

விடயம் ஆ (iv) "பயில்தொழிற்" சேவைகளும் நிலையச் சேவைகளும் மு. சே. ப. தனியார் மருத்துவ, சட்ட, கல்விச் சேவைகளாலும், இலாபத்தை நோக்கமற்றதாகக் கொண்ட தாபனங்களாலும் (உதாரணமாக மதம், பொதுநலத் தாபனங்கள், தொழிற் சங்கங்கள் ஆகியவைகள்) அளிக்கப்பட்ட சேவைகள்.

விடயம் ஆ (iv) சொந்தச் சேவைகள் மு. சே. ப. வண்ணார், அம்பட்டர், சாஸ்திரீகர், சாச்சடங்கு மேற்கொள்ளுபவர்கள் ஆகியவர்களின் சேவைகள்.

**அட்டவணை II (அ) 8**

விடயம் (அ) "மொத்த உள்நாட்டு உற்பத்தி"

மானியங்களும் உட்பட்ட நிகர மறைமுக வரிகளுக்கும் (விடயம் 2, அட்டவணை II அ—5), 'கையிருப்புக்களில் ஏற்பட்ட மறைமுக மாற்றங்களும், புள்ளிவிபர தவறுகளும் (விடயம் 13, அட்டவணை II அ—5) திருத்தியமைக்கப்பட்டு மொத்தத் தேசிய செலவிலுள்ள, நுகர்ச்சியினதும், மூலதன ஆக்கத்தினதும் மதிப்பீடுகளுடன் ஒத்துவரச் செய்யப்பட்டுள்ள அட்டவணை II அ—2இல் உள்ள விடயம் (iii) இதுவாகும்.

**அட்டவணை II (அ) 9**

விடயம் 7 இவ்வட்டவணையில் ஏனைய விடயங்கள் யாவும் மொத்தத் தேசியச் செலவு பற்றிய அட்டவணை II அ—4இல் இருந்து எடுக்கப்பட்டமையின், இவ்வெண் தொகையும் அவற்றுடன் ஒரே சீராக விளங்கும் படியாக, அட்டவணை II அ—5 இன் விடயம் 3 இல் காட்டப்பட்டுள்ள மொத்தத் தேசிய உற்பத்தியின் எண் தொகைகளை, அவ் வட்டவணையின் 13ஆம் விடயத்தால் திருத்தியமைத்து இங்கே கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை II (அ) 11**

விவசாய ஏற்றுமதிப் பொருட்களைப் பதப்படுத்துதலும் உட்பட.

**அட்டவணை II (அ) 14**

தெங்கும், தெங்குப் பொருட்களும்—இவ்விடயம் கொப்பரா, தேங்காய்த்துருவல் தேங்காய் எண்ணெய், தேங்காய்கள் ஆகியனவற்றை உள்ளடக்கும்.

## தேசிய உற்பத்தி, செலவு ஆகியனவற்றின் மதிப்பீடுகள் திருத்தியமைக்கப்பட்டமை.

இவ் அறிக்கையிற் கொடுக்கப்பட்டுள்ள தேசிய உற்பத்தி, செலவு, ஆகியனவற்றிற் சில விபரங்கள் திருத்தி அமைக்கப்பட்டமையால், முன்பு பிரசுரிக்கப்பட்ட அறிக்கைகளிலுள்ள விபரங்களுக்கும் இவற்றிற்கும் சில வேறுபாடுகள் உண்டு. திருத்தியமைக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு:-

**1. (அ) வெற்றிலையும் பாக்கும்**

**(ஆ) விறகு**

வெற்றிலைபாக்கு, விறகு ஆகியனவற்றின் உற்பத்தி, நுகர்ச்சி, ஆகியவை சம்பந்தமாக **1959**ஆம் ஆண்டு முதல் **1966** வரையான மதிப்பீடுகள், **1963**ஆம் ஆண்டின் "நுகர்வோர் நிதி அளவை"யின் தரவுகளின் அடிப்படையிற் திருத்தியமைக்கப்பட்டுள்ளன. இவ்வங்கியின் முந்தய வருடாந்த அறிக்கைகளில் இப் பொருட்களின் உற்பத்தி, நுகர்ச்சி, ஆகியவை சம்பந்தமாக வெளியிடப்பட்ட மதிப்பீடுகள், **1958**ஆம் ஆண்டின் "குடும்ப வரவுசெலவு அளவை"யிற் கண்டுள்ள விபரங்களை அடிப்படையாகக் கொண்டதாகும். குடும்ப வரவுசெலவு அளவையிற் கண்டுள்ள விபரங்கள், வாழ்க்கைச் செலவுக் குறிகாட்டியைத் திருத்தியமைப்பதற்கென அமைக்கப்பட்ட குழுவின் **1**ம் பாக அறிக்கையான **1959**ஆம் ஆண்டின் **XI** வது பருவப்பத்திரிகையிற் சேர்த்துப் பிரசுரிக்கப்பட்டுள்ளது. இக்'குடும்ப வரவு செலவு அளவை' பட்டினத் துறையிலுள்ள நுகர்ச்சிச் செலவுகளை மட்டும் ஆராய்வதாக உள்ளது. ஆனல் **1963**ஆம் ஆண்டில் நுகர்வோர் நிதி அளவை இலங்கையின் சகல பிரதேசங்களிலுமுள்ள குடியிருப்புகளைத் தழுவியதாகும். திருத்தியமைக்கப்பட்ட மதிப்பீடுகள், அட்டவணை **II** (அ) 3இல் உள்ள விடயம் 1-'விவசாயம் வனவியல், கால்நடை, மீன்பிடித்தல்', என்பதிலுள்ள உபபிரிவு (vi) 'வெற்றிலையும் பாக்கும்' என்பதையும், உபபிரிவு (vii) 'விறகு' என்பதையும், அட்டவணை **II** (அ) 6இல் உள்ள விடயம் ஆ (i) 'உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள்' என்பதில் உள்ள உபபகுதியான 'வெற்றிலையும் பாக்கும்' என்பதையும் 'விறகு' என்பதையும் பாதித்துள்ளது.

**2. கைத்தொழில் உற்பத்தி**

**1964** முதல் **1966** வரை உற்பத்தியாளர்களின் விலைப்படியும் சில்லறை விலைப்படியுமான கைத்தொழில் ஆலைகளின் உற்பத்திப் பெறுமானம் சம்பந்தமாக மேலும் விரிவுள்ள விபரங்கள் கிடைத்துள்ளமையால் இப்புதிய அடிப்படையில் இவ் ஆண்டுகளுக்கான மதிப்பீடுகள் திருத்தியமைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு திருத்தியமைக்கப்பட்ட மதிப்பீடுகள், அட்டவணை **II** (அ) 3இல் உள்ள, விடயம் 2 'கைத்தொழில்' (மூலதன அபிவிருத்தியைத் தவிர்ந்து) என்பதில் உள்ள உபவிடயம் (ii) 'ஆலைக் கைத்தொழில்கள்' என்பதையும், அட்டவணை **II** (அ) 6இல் உள்ள விடயம் (ஆ) 'உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களும்' சேவைகளும் என்பதிலுள்ள உப விடயமான 'கைத்தொழில் உற்பத்திகள்' என்பதையும் பாதித்துள்ளது.

**3. வர்த்தகமும், போக்குவரத்தும் செய்தியறிவிப்பும், ஏனைய விவசாய, வனவியற் பொருட்களும்**

வெற்றிலை பாக்கு, விறகு, கைத்தொழில் உற்பத்தி ஆகியனவற்றின் நிகர உற்பத்தி, செலவு, சம்பந்தமான மதிப்பீடுகள் மேலே கூறியவாறு திருத்தியமைக்கப்பட்டதைத் தொடர்ந்து, அட்டவணை II (அ) 2இல் உள்ள விடயம் (iv) "போக்குவரத்தும் செய்தியறிவிப்பும்" (அரசாங்கமல்லாத), மு. சே. ப. என்பதையும் விடயம் (v) வர்த்தகம் (அரசாங்கமல்லாத) மு. சே. ப. என்பதையும், அட்டவணை II (அ) 3 இல் உள்ள விடயம் 1 (x) 'ஏனைய விவசாய வனவியற் பொருட்கள்' என்பதையும், அட்டவணை II (அ) 6இல் உள்ள விடயம் ஆ (1) 'உள்நாட்டில்' உற்பத்தி செய்யப்பட்ட ஏனைய விவசாய வனவியற் பொருட்கள் என்பதையும் பாதித்துள்ளது.

**4. பயில் தொழிற் சேவைகள்**

1959, 1961 முதல் 1965 வரையான பயில்தொழிற்சேவை வருமானங்கள் சம்பந்தமான மதிப்பீடுகள் உள்நாட்டு இறைத் திணைக்களத்தினுற் தரப்பட்ட விபரங்களின் அடிப்படையின்படி திருத்தியமைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு திருத்தியமைக்கப்பட்டமை, அட்டவணை II (அ) 2ல் உள்ள விடயம் II (viii) 'சேவைகள் மு. சே. ப.' என்பதன் நிகர உற்பத்தி மதிப்பீட்டையும், அட்டவணை II (அ) 6ல் உள்ள விடயம் ஆ' 'உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களும் சேவைகளும்' என்பதன் உபவிடயம் (iv) 'சேவைகள் மு. சே. ப.' என்பதில் உள்ள உபவிடயம் 'பயில் தொழிற் சேவைகளும் நிலையச் சேவைகளும் மு. சே. ப,' என்பதையும் பாதித்துள்ளது.

**5. அரசாங்க கூட்டுத்தாபனங்களிலும் தனியார் துறையிலும் உள்ள மூலதன ஆக்கம்**

அரசாங்க கூட்டுத்தாபனங்களிலும் தனியார் துறையிலும் எற்பட்ட மூலதன ஆக்க மதிப்பீடுகள் வெவ்வேருக அட்டவணைகள் 11 (அ) 4 இலும் 11 (அ) 7 இலும் காட்டப்பட்டுள்ளன. அரசாங்க கூட்டுத்தாபனங்களின் மூலதன ஆக்கம் சம்பந்தமான மதிப்பீடுகள், சில கூட்டுத்தாபனங்கள் எமது வினுப் பத்திரங்களுக்கு பணிந்து அனுப்பிவைத்த விபரங்களிலிருந்தும், சில கூட்டுத்தாபனங்களின் வருடாந்த அறிக்கைகள் கணக்குகளிலிருந்து கிடைத்த விபரங்களிலிருந்தும், மதிப்பிடப்பட்டுள்ளன. இதிற் சேர்ந்துள்ள கூட்டுத்தாபனங்களாவன (1) இலங்கைச் சீமெந்துக் கூட்டுத்தாபனம், (2) இலங்கை எஃகுக் கூட்டுத்தாபனம் (1963ல் இருந்து), (3) இலங்கை பீங்கான் தொழிற் கூட்டுத்தாபனம், (4) இலங்கை ஒட்டுப்பலகைக் கூட்டுத்தாபனம், (5) இலங்கை எண்ணெய், கொழுப்புக் கூட்டுத்தாபனம், (6) இலங்கை கனிப்பொருள்மணற் கூட்டுத்தாபனம், (7) இலங்கை 'ரயர்க்' கூட்டுத்தாபனம் (1964ல் இருந்து), (8) இலங்கை உரக் கூட்டுத்தாபனம் (1964ல் இருந்து), (9) இலங்கை, அரசாங்க மா அரைத்தற் கூட்டுத்தாபனம், (10) இலங்கை அரசாங்க உலோகப் பொருட் கூட்டுத்தாபனம் (1963ல் இருந்து), (11) இலங்கை வன்மட்டை கூட்டுத்தாபனம் (1960ல் இருந்து), (12) இலங்கை கடற்தொழில் கூட்டுத்தாபனம் (1964ல் இருந்து), (13) இலங்கைப் போக்கு வரத்துச் சபை, (14) இலங்கை நில எரி எண்ணைக் கூட்டுத்தாபனம் (1961ல் இருந்து), (15) இலங்கைச் சுற்றுலாச் சபை, (16) இலங்கை விஞ்ஞான கைத்தொழில் ஆராய்ச்சிக் கழகம், (17) இலங்கை தேயிலை ஆராய்ச்சிக் கழகம் (18) இலங்கை தெங்குச் சபை (19) இலங்கைத் தோல் உற்பத்திப் பொருட்கள் கூட்டுத்தாபனம், (20) இலங்கை அரசாங்கப் பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம், (21) இலங்கை அரசாங்க பொறியியற் கூட்டுத்தாபனம் (1963ல் இருந்து), (22) தேசிய புடவைக் கூட்டுத்தாபனம், (23) தேசிய உப்புக் கூட்டுத்தாபனம், (24) தேசிய சிறு கைத்தொழிற் கூட்டுத்தாபனம், (25) தேசிய பாற்சபை, (26) கிழக்குத் தேசக் காகித ஆலைக் கூட்டுத்தாபனம், (27) இலங்கைச் சீனிக் கூட்டுத்தாபனம், (28) பரந்தன் இரசாயனப் பொருட்கள் கூட்டுத்தாபனம் (29) ஆற்ருேரப் பள்ளத்தாக்குகள் அபிவிருத்திச் சபை (உடவளவை அபிவிருத்தித்திட்டமும் கல்லோயாச் சீனித் தொழிற்சாலையும் உட்பட) (30) கைத்தொழிற் பண்ணைக் கூட்டுத்

தாபனம், (31) தெங்கு ஆராய்ச்சிக் கழகம் (32) இரப்பர் ஆராய்ச்சிக் கழகம், (33) இலங்கை விமானச் சேவை, (34) துறைமுக (கப்பற் சரக்குக்) கூட்டுத்தாபனம், (35) கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் முதலியனவாகும். இக் கூட்டுத்தாபனங்களுள் (2), (7), (8), (10), (11), (12), (14), (21) ஆகியன 1959ஆம் ஆண்டில், அதாவது அட்டவணை II (அ) 7இல் உள்ள புள்ளி விபரத் தொடர் ஆரம்பமாகும் வருடத்தில் இருக்கவில்லை. ஆகவே இவற்றின் மூலதன ஆக்க மதிப்பீடுகள் மேலே குறிக்கப்பட்ட வாறு, அவர்களின் பெயர்களுக்கு அருகிற் காட்டப்பட்டுள்ள வருடங்களிலிருந்தே சேர்க்கப்பட்டுள்ளன. சில வருடங்கள் சம்பந்தமாகச் சில கூட்டுத்தாபனங்களின் புள்ளி விபரங்கள் இவ் அறிக்கை வெளியிடப்படும்பொழுது கிடைக்கவில்லை.

பல கூட்டுத்தாபனங்களின் கணக்கு வருடம், பஞ்சாங்க வருடத்தோடு ஒத்து இருக்கவில்லை. இப்படியான சந்தர்ப்பங்களில், எந்த ஒரு கூட்டுத்தாபனத்தின் கணக்கு வருடத்திலாயினும் ஆறுமாதங்களுக்குக் கூடுதலான காலம், எந்தப் பஞ்சாங்க வருடத் தோடு காணப்படுமோ அக் கூட்டுத்தாபனத்தின் அந்தக் கணக்குவருடத்திற்கான முழு விபரங்களும் அந்தப் பஞ்சாங்க வருடத்திற்கான மதிப்பீடுகளுடன் சேர்த்துக் கொள்ளப் பட்டுள்ளது.

தனியார் துறையின் மூலதன ஆக்க மதிப்பீடுகள் திருத்தி அமைக்கப்பட்டமை, அட்டவணை II (அ) 7ல் உள்ள 'கட்டட வேலையும் ஏனைய சில ஆக்கத் தொழிலும்' என்ற விடயத்தைப் பாதித்துள்ளது.

கட்டட ஆக்கம் சம்பந்தமாக முந்தய வருடாந்த அறிக்கைகளிற் பிரசுரிக்கப்பட்ட மதிப்பீடுகள் இறக்குமதி செய்யப்பட்ட கட்டட ஆக்கப் பொருட்களின் பெறுமானத்தை 3⅓ ஆல் பெருக்கிக் கணிக்கப்பட்டதாகும். இவ்விதமானமுறை 1940ன் பின்னுள்ள பத்தாண்டு காலத்தின் இறுதியளவில், கட்டடத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் கூட்டு நிலையங்களிலிருந்து பெறப்பட்ட விபரங்களைக்கொண்டு, குடிசன மதிப்புப்புள்ளி விபரத் திணைக்களத்தைச் சேர்ந்த, கலாநிதி **கே. வில்லியம்ஸ்** என்பவரால் நியமிக்கப்பட்டதாகும்.

1963ம் ஆண்டு, ஏப்பிறல் 1ம் திகதி முதல், 1964ம் ஆண்டு மாச்சு 31ம் திகதி வரை தனிப்பட்டோர்துறையில் ஏற்பட்ட முதலீடு சம்பந்தமாக மத்திய வங்கியால் நடாத்தப்பட்ட அளவை தனிப்பட்டோர் துறையின் கட்டட ஆக்கச் செலவுகள் பற்றிய நேரடியான மதிப்பீடுகளைத் தந்துள்ளது. 1963ஆம் ஆண்டு சம்பந்தமாக, கட்டட ஆக்கத்தின் பேரில் எழுந்த மொத்தச் செலவில், இறக்குமதி செய்யப்பட்ட கட்டட ஆக்கப் பொருட்களின் கொ. கா. க. விலைகளின் படியான பெறுமானமும், இறக்கு மதிகளுக்குப் பதிலாக உள்நாட்டில் உற்பத்திசெய்யப்படும் சிமெந்து போன்ற, கட்டட ஆக்கப் பொருட்களின் ஆலை நிலைய விலைகளின்படியான பெறுமானமும், ஒன்று சேர்ந்து வகித்த பங்கு கணக்கிட்டறியப்பெற்றுள்ளது. இறக்குமதி, அல்லது உற்பத்தி செய்யப் பட்ட தினத்திற்கும் உபயோகிக்கப்பட்ட தினத்திற்கும் இடையிலேற்படக்கூடிய கால வேற்றுமைகளுக்கு இடம்விட்டுக் கணிப்பதற்காக, 1963ம் ஆண்டில் இறக்குமதி அல்லது உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் பெறுமானத்தில் முக்காற்பங்கையும் அதற்கு முந்தய வருடத்தில் இறக்குமதி அல்லது உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் பெறு மானத்திற் காற்பங்கையும் ஒன்று சேர்த்து கட்டட ஆக்கச் செலவில் இப் பொருட்களின் பெறுமானம் வகித்த வீதப்பங்கு கணிக்கப்பட்டுள்ளது. இவ்விதப் பங்கை ஏனைய வருடங்களில் இறக்குமதி செய்யப்பட்டதும் உற்பத்தி செய்யப்பட்டதுமான கட்டட ஆக்கப் பொருட்களின் பெறுமானத்தின் மேல் அமைத்து கட்டட ஆக்கமும் 'ஏனைய சில ஆக்கங்களும்,' என்ற விடயத்தின் மூலதன ஆக்க மதிப்பீடுகள் கணிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு திருத்தியமைக்கப்பட்டமை, அட்டவணை II (அ) 2ல் உள்ள விடயம், II (iii) தனியார் துறையினதும் அரசாங்கத்துறையினதும் மூலதன அபிவிருத்தி என்பதையும் பாதித்துள்ளது.